880

கிரந்தகர்த்தா
பிரசுரகர்த்தா } வை. மு. கோதைநாயகி அம்மாள்

JEGAN MOHINI

ஜெகன்மோகினி.

மலர் III 1926 இதழ் 4.

OFFICE OF THE REGISTRAR ... 16 FEB 1926

கன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
ருவல்லிக்கேணி, மதராஸ்.

3L
ஈ2ய,ஈ225ந
N26·3·4.
182822

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்.

எமது ரேஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்
புஸ்தகம் பார்த்து வாங்குங்கள் !!

ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்றாய்த் திருத்தப்பட்டு 5-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது உடனே எழுதுங்கள்.

விலை ரூ. 2

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாய ரில்லாமல் தெரிந்து கொள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுலுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம் தேவை.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். கேட்லாக் இனாம்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

: : ஒரு மாதம் வரையிலும் : :



எங்களின் பாடர்ன் ரெகுலேடர் பெயர் பெற்ற சுவரில் மாட்டக்கூடிய கடியாரத்துடன், 18 காரட்டு தங்க கைக்கடியாரத்தை அழகிய தோல் பட்டையுடன், ஒரே தடவையில் ஆர்டர் செய்கிறவர்களுக்கு

இரண்டும் ரூ 10க்கு கொடுக்கப்படும்.

தனித் தனியாக வேண்டுமானால் சுவரில் மாட்டக்கூடியது ரூ 5

கையில் கட்டும் ரோல்டுகோல்டு கெடியாரம் ரூ 7 0



விலாசம்:—

காப்டன் வாட்சு கம்பெனி,
தபாற்பெட்டி நெ. 265, மதராஸ்.

ஒரு விக்ஞாபனம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1926
MAD

ஜெகன்மோகினியின் சந்தா நேயர்களான எனது அன்பார்ந்த ஸகோதர ஸகோதரிகளே !

ஒவ்வொரு மாதத்து ஸஞ்சிகையையும் அந்தந்த மாதம் கடைசித் தேதிக்குள் வெளியிடுவதாக எழுதித் தெரிவிக்கப் பட்டிருந்ததற்கு மாறாக இந்த ஸஞ்சிகையின் வெளியீட்டிற்கு சில தினங்கள் வரையில் காலஹரணம் ஏற்பட்டுப் போனதைப்பற்றி நான் நிரம்பவும் வருந்துகிறேன்.

என்போன்ற பெண்பேதையர் பத்திரிகை நடத்துவதான அரிய பெரிய கருமத்தை ஏற்றுக்கொள்வதற்கு அருகர் அல்லர் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டு, சொல்லாலோ, அல்லது, செயலாலோ, தத்தம்மாலேன்ற இடையூறுகளைச் செய்யும் மகோபகாரிகளின் இடையில் தனித்து நின்று, எண்ணிறந்த இடைஞ்சல்களை மேற்கொண்டு நான் இந்தத் திருப்பணியை நடத்தி வருகின்றேனாயினும், சந்தா நேயர்களின் மனது புண்படாதபடி ஸஞ்சிகைகளை சரியானகாலத்தில் வெளியிட்டு எல்லோரையும் மகிழ்விக்க வேண்டுமென்ற சங்கற்பத்தையே பெரும் விரதமாகப் பூண்டு, இரவு பகல் அதே கவலையை ஊணுறக்கமாகக்கொண்டு, என்னாலியன்றவரை பாடுபட்டு வருகின்றேன். அங்ஙன மிருந்தும், இம்மாதம் நான் எதிர்பாராததும், என்னால் விலகா இயலாததுமான சில அசந்தர்ப்பம் நேரிட்டது பற்றி, இச்சிறிய தாமதம் ஏற்பட்டது. சந்தா நேயர்கள் என்மீது வைத்துள்ள அளவு கடந்த அன்புப் பெருக்கில், இதைப் பாராட்டாது, க்ஷமிக்குமாறு தாழ்ந்து இறைஞ்சுகிறேன். இதற்கு ஓர் ஆறுதலாக, அடுத்த ஸஞ்சிகையை அதன் காலத்திற்கு முன்பே அனுப்பிவிட முயற்சித்து வருகிறேன்.

முடிவாக இன்னொரு மனு. ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதி கழிந்தபின்னர் சுமார் ஒருவார காலம் வரையில் சந்தா நேயர்கள் பொறுத்துப் பார்ப்பார்களாயின், அவர்களுக்கு அநாவசியமாக ஏற்படும் தபாற் செலவும், கடித மெழுதும் பிரயாசையும் இல்லாமல் போவது நிச்சயம். அதற்குமேலும ஸஞ்சிகை வராவிடில், அது தபாலில் தவறிப்போயிருக்க வேண்டுமென்ற நிச்சயத்தைக் கொண்டு, மறுபடி இன்னொரு பிரதி அனுப்புமாறு எனக்கெழுதுவதே உசிதமாகத் தோன்றுகிறது. இந்த ஏற்பாடு எல்லோருக்கும் திருப்திகரமானதாகத் தோன்றுமென நம்பும்

தங்கள் ஸகோதரி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

கிரந்தகர்த்தா & பிரசுரகர்த்தா.

[illegible]
[illegible]
[illegible]

182822

[illegible] 600 008

4-வது அதிகாரம்.

போலீஸ் லோள்ளுதுரை—லோகாற்புதம் ஜெமீந்தார்.

ஆலங்காத்தாபிள்ளை தெருவிலிருந்து வீணைப்பெட்டியை எடுத்துக்கொண்டு போன துபாஷ் சாரங்கபாணி முதலியாரை இனி நாம் கவனிப்போம். பெட்டிக்குள் படுக்க வைக்கப்படும் பெண் நடுவழியில் தெளிவடைந்து விழித்துக்கொண் டெழுந்தால், தங்களது சூதும் ரகஸியமும் வண்டிக்காரனுக்குத் தெரிந்துபோய் விடுமென்ற முன் யோசனையினால் சாரங்கபாணி முதலியார் வாடகை வண்டியை அமர்த்திக்கொள்ளாமல் ஜெமீந்தாரது சொந்த வண்டியொன்றைக் கொண்டு வந்திருந்த தன்றி, அவரிடம் அந்தரங்கமாக நடந்துகொள்ளும் ஒரு வேலைக்காரனையே தனது கையாளாக அழைத்து வந்திருந்தார். அவர் பெட்டியை எடுத்துப்போனது இரவு எட்டுமணி சமயமென்பது முன்னரே கூறப்பட் டிருக்கிறது. நிரம்பவும் பளுவாக இருந்த வீணைப் பெட்டியை சாரங்கபாணி முதலியார் ஒரு பக்கத்திலும், கையாள் இன்னொரு பக்கத்திலுமாய்த் தூக்கிக்கொண்டு போய் வண்டியில் வைத்தனர். பெட்டி சுமார் ஒன்றரை அடி அகலம், ஐந்தடி நீளம், ஒன்றரை யடி உயரம் இருந்ததாகையால், வண்டியின் பெரும்பாகத்தையும் அது அடைத்துக்கொண்டது. மிகுதி பாகம் நீட்டுப்போக்கில் சுமார் ஒன்றரை யடி அகலத்தில் காலியாக இருந்தது. அந்தக் காலி இடத்தில் முன்பக்கத்தில் அவரது கையாள் உட்கார்ந்து கடிவாள வாரைப் பிடித்துக்கொண்டு சாரத்யம் செய்தான். நமது செங்கான்கடை சாரங்கபாணி முதலியார் தொந்தி தொப்பை முதலிய பெரிய மனுஷ அங்கம் வாய்ந்த கம்பீர புருஷராதலால் அவர் தமது வாத சரீரத்தை அடக்கி ஒடுக்கி நிரம்பவும் பாடுபட்டு வண்டியின் நடுவில் உட்கார்ந்து வீணைப்பெட்டியின் மேல்மூடியை நான்கு விரல் கடை உயரம் திறந்து பிடித்துக் கொண்டார். இடை வழியில் பெண் தெளிவடைந்து விழித்துக்கொள்ளும் குறி ஏற்பட்டால், பெட்டியை மூடித்தாளை மாட்டி வெளியில் பூட்டிவிட வேண்டுமென்ற கருத்தோடு அவர் தமது சட்டைப் பையில் ஒரு சிறிய பூட்டை ஆயத்தமாக வைத்துக் கொணர்ந்திருந்தார்.

தேனும்பேட்டையில் வைதேகியை அடைய விரும்பி ஆவலே வடிவாகக் காத்திருந்த ஜெமீந்தார் வண்டியை அதிக விரைவில் ஓட்டிக்கொண்டு துரிதமாக வந்து சேரும்படி ஆக்ஞாபித்திருந்தமையாலும், வண்டியின் அசைவினுல் பெண் உருட்டப்படுவதால், அவளது மயக்கம் தெளிவடைந்து விடுமோ என்ற அச்சம் அவர்களது மனத்தில் இருந்தமையாலும், போலீசார் முதலியோர் சந்தேகித்துவண்டியை நிற்க வைத்துத் தங்களைப் பிடித்துக்கொள்வார்களோ என்றதில் உண்டானமையாலும், வண்டியில் வீணைப்பெட்டியை வைத்தவுடனே, வேலைக்காரன் தாமதமின்றியும், அதிவேகமாயும் வண்டியை ஓட்டிக்கொண்டு போகவேண்டுமென்று அதற்கு முன்னரே துபாஷ் சாரங்கபாணி முதலியார் சொல்லி வைத்திருந்தாராதலால், இருவரும் ஏறி உட்கார்ந்து கொண்டவுடனே, வேலைக்காரன் இடது கையில் கடிவாள வாரை இறுகப்பிடித்து வலது கையில் சாட்டையை எடுத்து குதிரையின் வயிற்றில் சுளீர் சுளீரென்று நிரம்பவும் பிரியத்தோடு நாலைந்து அடிகள் சமர்ப்பிக்கவே, மிகுந்த திமிரும், வீரமும் நிறைந்த அந்தக் குதிரை ஒரே பிடுங்கலாய்ப் பிடுங்கிக்கொண்டு எதிரில் மனிதர்கள், அல்லது, வண்டிகள் வருவதையாவது, தான் சென்ற தெரு குறுகலானது என்பதையாவது பொருட்படுத்தாமல் தலைகால் பாராது நாற்கால் பாய்ச்சலில் பறக்கத்தொடங்கியது. குதிரை தனது முழு பலத்தையும் வெளிப்படுத்தி எவ்வளவு அதிக விசையாய் ஓடக் கூடுமோ, அவ்விதத்தில் ஒரே ஓட்டமாகப் பாய்ந்துபோனுலும், துபாஷ் சாரங்கபாணி முதலியாரது மனமும் தேகமும் அதற்குமேல் அதிகமாய்ப் பறந்து துடி துடித்தன. பறங்கிப்பழம்போல இருந்த அவரது உடம்பு வழுக்கி வழுக்கி வண்டியின் பின்பக்கத்தை நோக்கிப் பிரயாணம் போய்க்கொண்டிருந்த தானுலும், அதையும் மீறி அவரது தீவிரமான மனதோ அத்பாச்சரியமான விசையோடு தேனும்பேட்டையிலிருந்த ஜெமீந்தாரிடம் போய் சந்தோஷச் செய்தி தெரிவிக்கவும், அவர் தமக்கு சன்மானமாகக் கொடுக்க வாக்களித்திருந்த வைரமோதிரத்தை வாங்கியணிந்துகொள்ளவும் சென்றுகொண்டிருந்தது. அவரது மாயவலையில் வீழ்ந்த பெரிய மனிதர்களை அவர் வஞ்சித்து அவர்களிடம் பொருள் பறிக்கும் திறமை அபாரமானதென்பதை நாம் மறுபடியும் தெரிவிப்பது மிகையேயாகும். ஆயினும் அவ

ரது குணாதிசயங்களில் முக்கியமான ஓர் அம்சத்தை மாத்திரம் நாம் சுருங்கக் கூறுவது அவசியமாகத் தோன்றுகிறது. தாராளமாகப் பணம் கொடுக்கக்கூடிய பெரிய மனிதர் எவராகிலும் அகப்பட்டு விட்டால், அவரது சிநேகமும் வாஞ்சையும் எப்போதும் மாறாது தம்மீது நீடித்து இருக்க வேண்டுமென்பதும், அவரிடம் தாம் ஓயாமல் பொருள் பறித்துக்கொண்டே இருக்க வேண்டுமென்பதும் அவரது அந்தரங்கமான கருத்து. ஏனெனில், புதிய புதிய மனிதர்களைக் கண்டுபிடித்து, அவர்களோடு சிநேகம் செய்வதான பிரயாசையின்றி, தாம் நல்ல சரக்குகளாய்த் தேடிப்பிடித்து நல்ல லாபம் வைத்து விற்பனை செய்வதொன்றிலேயே தாம் தமது முழு கவனத்தையும் செலுத்தலாமென்பது அவரது முக்கியமான கொள்கை. ஆனால், தம்மிடம் வியாபாரம் வைத்துக்கொள்ளும் ஒவ்வொரு பெரிய மனிதரும் ரதிதேவி போன்ற முதல்தரமான உருப்படியே தேவை என்று கோருவதால், தாம் முதலில் அனுப்பும் ஒருத்தி மீதே அவர்கள் அபாரமான மோகங்கொண்டு அவர்களையே எப்போதும் வைத்துக் கொள்ள எண்ணிவிடின் அதன் பிறகு அவர்கள் தமது தயவை நாடமாட்டார்களாதலால், அந்தச் சரக்கு சம்பந்தப்பட்ட வரையில் தமக்கு அதன் பிறகு வருமானம் இல்லாமல் போய்விடுமென்ற அச்சம் அவரது மனத்தில் இருந்தது. தாம் கொண்டுபோய்ச் சேர்த்து விடும் பெண்ணும், தான் ஓரே இடத்தில் உறுதியாக இருந்துவிட வேண்டுமென்ற விருப்பங்கொள்வது சகஜமாதலால், அவள் தனது சாகஸங்களை உபயோகித்து, அந்தப் பெரிய மனிதனைத்தனது மோக வலையில் சிக்கவைத்துக் கொண்டால், அதன் பிறகு அவர்களிருவரும் தம்மைச் சேர்க்காமல் விரட்டி விடுவார்களென்ற முன் யோசனையும் அவருக்கு இருந்து வந்தது. ஆகவே, அவர் ஒரு பெண்ணை ஒரு பெரிய மனிதரிடம் சேர்த்து வைக்குமுன், அவள்தான் பிரம்ம சிருஷ்டியிலேயே நிகரற்ற எழில் வாய்ந்தவளென்றும், அவள் ஒரு மகாராஜனுக்கே தகுந்தவளென்றும், இன்னும் அதுபோன்ற பொய் ஸ்தோத்திரங்களையும் செய்து, சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் பொருளை அபகரித்துக்கொண்டு அவரிடம் ஒருத்தியைக் கொண்டு போய்ச்சேர்த்து வைப்பார். அதன் பிறகு ஒரு வாரம், அல்லது, பத்து தினங்கள் வரையில் அவ்விடத்

திற்குப் போகாமல் பேசாதிருந்துவிட்டு, மறுபடி அவரிடம் போய், நிரம்பவும் தந்திரமாகப் பேசி "ஆகா! என்ன போங்கள்! தாங்கள் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டீர்கள். இந்த ஒருவார காலம் தாங்கள் பொறுக்காமல் போய்விட்டீர்கள். நான் என்னவென்று சொல்லுவேன். நேற்று இராத்திரி மெயில் வண்டியில் பம்பாயிலிருந்து ஒரு பார்ஸி ஜாதிப் பெண் வந்திருக்கிறாள். ஆகா! அவளை நான் எப்படி வர்ணித்து அவளுடைய அற்புதமான அழகை உள்ளபடி எடுத்து உங்களுக்குச் சொல்லுகிறதென்பது தெரியவில்லை! நானும் இந்தப் பட்டணத்தில் இத்தனை வருஷகாலமாக இருந்து ஒருத்தியைவிட ஒருத்தி மிஞ்சிய லட்டு ஜிலேபிகளான எத்தனையோ ஸ்திரீ ரத்னங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால், நான் பிறந்தது முதல் இதுவரையில் இந்தப் பார்ஸிஜாதிப் பெண்ணைப் போன்ற மகா புதுமையான அழகுடைய பெண்ணைப் பார்த்ததே இல்லை. இது எவருக்கும் கிடைக்காத ஒரு தனியான சிருஷ்டியாக அமைந்திருக்கிறதென்று சொல்வதொன்றைத் தவிர இப்போது அதிகமாய்ச் சொல்ல எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இவள் வடக்கே காஷ்மீர் தேசத்து மகாராஜாவின் வைப்பாட்டியின் மகளாம். இங்கே இவள் இராமேசுவர யாத்திரைக்காக வந்திருக்கிறாள். தெய்வத்தின் அருளால், எனக்கு அவளிடம் பழக்கம் ஏற்பட்டது. தாங்கள் வேறொன்றும் செய்ய வேண்டாம். அந்தப் பெண்ணை நீங்கள் ஒரே ஒருதரம் கண்ணால் பார்ப்பீர்களானால், அதுவே எனக்குப் போதுமானது. அவளைப் பார்த்தவுடனே, எனக்கு என்னுடைய மற்ற சிநேகிதர்களுடைய நினைவு உண்டாகவில்லை. தங்களுடைய நினைவுதான் உண்டாயிற்று. ஏனென்றால், இந்த விஷயங்களில், இங்கிதம் தெரிந்த மனிதர் தாங்கள் ஒருவரே என்பது என்னுடைய மனப்பூர்த்தியான அபிப்பிராயம். இது போனால், இனி வராது. என்ன சொல்லுகிறீர்கள்? இந்த ஓர் இராத்திரிதான் அவள் இந்த ஊரில் இருக்கப்போகிறாளாம்" என்று நிரம்பவும் நயமாகவும் தளுக்காகவும் பேசுவார். வாயில் ஆநந்த நீர் ஊறும்படி அவர் பேசுவதைக் கேட்கும்போதே, அந்தப் பெரியமனிதர் தம்மிடம் ஏற்கெனவே வந்திருக்கும் பெண்ணைத் தந்திரமாக விலக்கிவிடவும், எப்பாடுபட்டாவது அந்தப் பார்சிஜாதிப் பெண்ணை சுவீகரித்துக் கொள்ளவும் வேண்டுமென்ற விலக்கமுடியாத அவா அவாது

மனதில் ஏற்பட்டுவிடும். உடனே சாரங்கபாணி முதலியார் பெருத்த பணத்தொகையை அபகரித்துக்கொண்டு போய்ச்சேருவார். அன்றைய தினம்இரவில்எவளையாவது ஒருத்தியைப் பிடித்து அவளுக்குப்பார்ஸி ஸ்திரீ வேஷம் போட்டுக் கொண்டுவந்து அவரிடம் தள்ளிவிடுவார். இம் மாதிரி அவரது வருமானம் நிரந்தரமாக இருந்து வந்தது. சாதாரண மான ஒரு குப்பைக்காரியின் மகளைக்கூட, இந்திராணி யென் றும், ரம்பை, திலோத்தமையென்றும் அபாரமாகப் புகழ்ந்து எவ ருடைய கழுத்திலாகிலும் அவளைக் கட்டிவிட்டு, ஆயிரம் ஐந்நூறு கறந்துகொள்ளும் குணமுடைய சாரங்கபாணி முதலியார், உண்மை யிலேயே அபூர்வமான வனப்பும் முகவசீகரமும் வாய்ந்தவளான நமது வைதேகியைப்பற்றி எவ்விதமான ஸ்தோத்திரமொழிகளை உபயோகித் திருப்பாரென்பது கூறாமலே விளங்கும். தேனாம்பேட்டையில் ஒரு பங்களாவில் வந்திறங்கி இருந்த ஜெமீந்தாருக்கு நிரந்தரமான இரண் டாவது மனையாட்டியாக அவளைச் சேர்த்து வைப்பதற்காக, கூனற் கிழவிக்கு மாத்திரம் அவர் ஆயிரம் ரூபாய் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்ட காலத்தில், ஜெமீந்தார், சாரங்கபாணி முதலியாருடைய பூர்வாங்கச் செலவுகளுக்காக ஐந்நூறு ரூபாய் வழங்கிவிட்டு, "ஐயா! நீர் செய்யப்போகும் இந்தப் பேருதவிக்கு நான் உமக்கு எவ்வளவு பெரிய தொகை கொடுத்தாலும், அது சரியான சன்மானமா காது. இருந்தாலும், இன்றைய இரவில் அந்தப் பெண்ணை நான் நேரில் பார்க்கிறேன். நீர் சொல்லுகிறபடி, அவள் உண்மை யிலேயே வசீகரமான அழகும் நற்குணங்களும் வாய்ந்தவளாக இருக்கும் பட்சத்தில், என் கையில் நான் போட்டிருக்கும் இரண் டாயிரம் ரூபாய் பெறுமான முடைய இந்த வைரமோதிரத்தை நான் உடனே எடுத்து உம்முடைய கையில் போட்டுவிடுகிறேன். இது உறுதியான பேச்சு." என்று கூறி அந்த மோதிரத்தையும் காட்டி இருந்தாராதலால், அதை வாங்கித் தாம் அழகாய்த் தமது கையில் அணிந்துகொள்ள வேண்டுமென்று சாரங்கபாணி முதலியார் அன்றைய பகல் முழுதும் ஆவல்கொண்டு அந்தப் பெரும் நெருப்பி னால் தகிக்கப்பட்டிருந்தவராதலால், அவரது மனம் குதிரையின் ஓட்டத்தைக் காட்டிலும் பலகோடி மடங்கு விசையாகவே ஓடி ஜெமீந் தாரின் மாளிகையை அடைந்து வைர மோதிரத்தில் சென்று லயித் துப்போயிற்று. குதிரை நிரம்பவும் உயர்வான உன்னத ஜாதி உருப் படியாதலால், வண்டியின் முன்பாகம் உயர்வாகவும், மற்ற பாகம் பின்

புறம் சரிவாகவும் இருந்தமையால் அந்த அமிதமான ஓட்டத்தில் சாரங்கபாணி முதலியாரது தேகமும் வீணைப்பெட்டியும் வழுக்கி வழுக்கிப் பின்பக்கத்தில் வந்துகொண்டே இருந்தன. அபாஷ் சாரங்கபாணி முதலியார் நிரம்பவும் பாடுபட்டு ஒருகையால் வண்டிக்கூண்டின் பிரம்பை இறுகப் பிடித்துக்கொண்டு, இன்னொரு கையால் வீணைப் பெட்டியின் மேல்மூடியைக் கொஞ்சம் திறந்தபடி, பெட்டி பின்னால் நழுவாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளத் தொடங்கினார். வண்டி, கண் தெறித்துப்போய்விடத் தக்க அமிதமான விசையாக ஓடியதாகையாலும், பெட்டியின் அடிப்பாகத்தில் நான்கு மூலைகளிலும் அதை சுலபமாக நகர்த்துவதற்கு உருளைகள் வைக்கப்பட்டிருந்தமையால், பெட்டி பின்பக்கத்தில் உருண்டு உருண்டு போனதாகையாலும், முதலியார் வண்டிக் கூண்டோடும் பெட்டியோடும் பெருதத மல்லயுத்தம் செய்து செய்து பார்க்கிறார். தமது முழு வல்லமையையும் மீறி, தாமும் பெட்டியும் பின்னால் நகர்ந்துபோவதைத் தடுக்க இயலாதவராய் அவர் சுமார் பத்து நிமிஷநேரம் வரையில் தத்தளித்துப் போய்விட்டார். அவரது உபத்திரவத்தைப் பெருக்குவதற்கு அநுகுணமாக பெட்டிக்குள்ளிருந்த கிழவியின் உடம்பும் தடார் புடாரென்று அப்புறம் இப்புறம் நகர்ந்து பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் போய் மோதலாரம்பித்ததன்றி, மயக்கத்தினால் சோர்ந்து கிடந்த அவளது உடம்பு முழுதும் உருண்டையாகத் திரண்டு பின் பக்கத்தில் போகவாரம்பித்தது. அவ்வாறு அவள் அசைந்தாடி ஓசை செய்த காட்சி, அவளது யௌவனப் பருவத்தின் திருவிளையாடல்களை நினைவூட்டின. அக்காலத்தில் அவள் தனது சுட்டுமஸ்தான தேகத்தில் பட்டாடைகளையும் கெட்டி கெட்டியான ஆபரணங்களையும் அணிந்து, புட்டி புட்டியாய் அத்தர்களை வாரிக் கொட்டிக் கொட்டித் தன்னைப் பட்டமகிஷிபோல அலங்கரித்துக்கொண்டு, மாலை எட்டுமணி முதல் கட்டிலுக்கும் ஜன்னலுக்குமாய் வட்டமிட்டு அட்டகாசம் செய்து, கட்டழகனது வருகையை மட்டுக்கடங்கா ஆவலோடு எதிர்பார்த்து, அவன் வந்தவுடன் கிட்ட நெருங்கியும் நெருங்காமலுமிருந்து, அவனது சட்டைப் பையைத் துடைத்து அவனது மனத்தையும் சிநேகத்தையும் கெட்டியாகப் பிடித்து அவனிடம் அட்டைபோல ஒட்டிக்கொண்டு, நாளா வட்டத்தில் அவன் கெட்டழிந்து, கட்டக் கந்தையற்று, வெட்ட வெளியில் திட்டமாய் அலையும்படி செய்து தினம் தினம் எண்ணிறந்த அட்டூழியங்களை நடத்

தும் கெட்டிக் காரியான கூனற்கிழவி அந்தக் காலத்தில் விடபுருஷர்களை மயக்கி வசப்படுத்துவதற்காகக் குலுக்கி மினுக்கு அன்னநடை நடந்து அசைந்தாடியது இப்படித்தான் என்று சாரங்கபாணி முதலியாருக்குக் காட்டுகிறவள்போல், கூனற்கிழவி ஆநந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தாள். தான் கூனற்கிழவியானலும், தான் கற்ற வித்தையை யெல்லாம் தேனம்பேட்டையிலுள்ள பொக்கைக் கிழவனிடம் காட்டினால், அவன் தன்னைக் கண்டு மோகித்து ஆநந்த பரவசமடைந்து இப்படித்தான்மெய்ம்மறந்து போவான் என்று சாரங்கபாணி முதலியாருக்கு நிரூபிக்கிறவள்போல கூனற்கிழவி உயிரற்ற சவமென வாயைப் பிளந்து கொண்டு அகோரத் தோற்றமாகக் கிடந்தாள்.

அவ்வித நிலைமையில் வண்டி அலங்காத்தா பிள்ளை தெருவோடு தெற்கு நோக்கிச் சென்று சிறிது தூரத்திற்கப்பால் குறுக்கிட்ட பண்டி வெங்கடேச நாயக்கன் தெருவை யடைந்து மேற்குமுகமாய்த் திரும்பி அந்தத் தெருவின் கோடியையடைவதற்குள், சாரங்கபாணி முதலியாரது உடம்பு பந்துபோல உருண்டு உருண்டு ஆயிரம் தடவை பின்னுக்கு வந்துவிட்டது. வீணைப்பெட்டியும் வழுக்கிக்கொண்டு கால் பாகம் அரைப்பாகம் வரையில் வண்டிக்கு வெளியில் வந்து பல தடவைகளில் கீழே விழக்கூடிய நிலைமையை யடைந்து விட்டது. சாரங்கபாணி முதலியார் தமது உடம்பைக் காப்பாற்றிக் கொள்வதோடு, வீணைப்பெட்டி கீழே விழாமல் அதை அழுத்திப்பிடித்துக் கொண்டிருந்ததால் அவரது உடம்பு வியர்த்து விருவிருத்துப் போய் விட்டது. உடம்பு முழுதும் குப்பென்று வியர்த்துத் தண்ணீர் மயமாகிவிட்டது. கைகால்களெல்லாம் சோர்வும் எரிச்சலும் கொண்டு தத்தளித்துத் தடுமாற வாரம்பித்தன. வண்டி அவ்வளவு சொற்ப தூரம் வருவதற்குள் தமது பிராணன் தடுமாறத் தொடங்கிவிட்டதே என்றும்,மேலும் ஒன்றரை மயில் தூரம் போவதற்குள்,வெற்றுவண்டி தான் மிஞ்சி வீடுபோய்ச் சேருமென்றும் உணர்ந்த சாரங்கபாணி முதலியார் வண்டி பண்டி வெங்கடேசநாயக்கன் தெருக்கோடியிலுள்ள நாராயண ஐயரது சிற்றுண்டிச் சடையண்டை தெற்கு முகமாய் ஹைரோட்டில் திரும்பிய காலத்தில் வண்டிக்காரனைக் கூப்பிட்டு “அடேய்! நிறுத்து: நிறுத்து. வண்டியின் முன்பக்கம் நிரம்பவும் உயரமாகவும் பின்பக்கம் சரிவாகவும் இருப்பதால், அதிவேகமாய்ப் போவதில், என்

உடம்பு வழுக்கிக்கொண்டே பின்னால் போகிறது. பெட்டியின் அடிப் பக்கத்தில் சகடைகள் வைத்திருக்கிறார்கள்போ லிருக்கிறது. அவை களும் கடகடவென் றுஉருண்டு பின்னால் போனபடியே இருக்கின்றன. பெட்டியைத் திறந்து பிடித்துக்கொண்டே இருப்பதும், அதோடு என்னை சமாளித்துக்கொள்வதும் நிரம்பவும் கஷ்டமாக இருக்கிறது. வண்டியைக் கொஞ்சநேரம் இப்படியே நிறுத்து. ஒரு கயிறு சம்பா தித்து இந்தப் பெட்டியை வண்டியோடு சேர்த்துக் கட்டிவிடுவோம். அதன் பிறகு எனக்கு இவ்வளவு கஷ்டம் இருக்காது'' என்றார். அதைக்கேட்ட வேலைக்காரன் உடனே வண்டியை அங்கிருந்த முடக் கில் நிறுத்தினான். அவனும் சாரங்கபாணி முதலியாருமாகச் சேர்ந்து, பின்னால் நழுவி வெகு தூரம் சென்றிருந்த வீணைப்பெட்டியை மெது வாக முன்னால் இழுத்து சரியாக வைத்தனர். மூடியைத் திறந்து பிடித்தபடி பெட்டியை முன் பக்கத்தில் இழுத்துப்பிடித்துக் கொண் டிருக்குமாறு வேலைக்காரனிடம் சொல்லிவிட்டு, சாரங்கபாணி முதலி யார் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார். வீணைப்பெட்டியை வண்டி யோடு சேர்த்துக் கட்டுவதற்குத் தேவையான கயிற்றை யாரிடம் கேட்டு வாங்கலாம் என்ற எண்ணத்தோடு முதலியார் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தார். அதற்கு எதிரில் ஒரு வெற்றிலைபாக்குக் கடை இருந்தது. அந்தக் கடையில் அதன் சொந்தக்காரரான ஐயர் முணுக்கு முணுக்கென்று எரிந்துகொண் டிருந்த ஒரு சிறிய விளக்கின் முன் கபடப்பார்வையும் அற்ப புத்தியும் முகத்தில் ஜ்வலிக்க உட்கார்ந் திருந்ததைக் காண, அவரிடம் தாம் போய்க் கயிறு கேட்டால், அவர் தம்மீது நாய்போலச் சீறிவிழுவார் என்று சாரங்கபாணி முதலியார் அஞ்சி அவரிடம் போகவேண்டுமென்று தம்மனதி லுண்டான விருப் பத்தை அடக்கிக்கொண்டு மறுபடியும் அப்புறம் இப்புறம் திரும்பிப் பார்த்தார். அங்கிருந்த வீடுகளெல்லாம் அநேகமாய் மூடப்பட்டுப் போயிருந்தன. எந்த இடமும் அவரது விருப்பத்திற்கு அநுகுண மாகப்படவில்லை. அவர் தயங்கிக் கலங்கி சிறிது நேரம் அப்படியே நின்று யோசனை செய்தார். பக்கத்திலிருந்த சிற்றுண்டிக் கடையும் மூடப்பட்டுப் போயிருந்தது. ஆனால் சாரங்கபாணி முதலியார் அதற்கு முன் இரண்டொரு சந்தர்ப்பங்களில் பகல் வேளையில் அந்த சிற்றுண்டிக் கடையில் பலகாரம் காப்பி முதலியவை உண்டுவிட்டுப்

போனவராதலால், அவ்விடத்தில், மிகுந்த நற்குணமும், பிறருக்குத் தம்மாலேன்றவரை உதவிசெய்ய வேண்டுமென்ற தயாளசிந்தையும், எப்போதும் பிறரிடம் அன்பாகவும் நயமாகவும் பேசும் சுபாவமும் வாய்ந்த ராயர் ஒருவர் இருக்கிறாரென்பதை சாரங்கபாணி முதலியார் உணர்ந்திருந்தாராதலால், தாம் அந்த சந்தர்ப்பத்தில் அவரது உதவியை நாடினால், தாம் கோரிய வஸ்துவை எப்பாடுபட்டாவது அவர் சம்பாதித்துக் கொடுப்பாரென்ற எண்ணம் உதித்ததாகையால், முதலியார் உடனே சிற்றுண்டிக்கடையின் வாசற்கதவண்டை போய் "சாமீ! சாமீ!" என்று நிரம்பவும் பணிவாகவும் நயமாகவும் இரண்டு மூன்று முறை கூப்பிட்டார்.

உடனே உட்புறத்திலிருந்து "யார் அது? காப்பி முதலிய எந்த சாமானும் மிச்சமில்லை. எல்லாம் தீர்ந்து போய்விட்டது" என்று ஒரு சிறுவன் மறுமொழி கொடுத்த குரல் கேட்டது. அதைக்கேட்ட முதலியார் "சாமீ! கொஞ்சம் கதவைத் திறவுங்கள். இங்கே ஒரு ராயர் ஐயா இருந்தாரே அவரிடம் ஒரு சங்கதி பேசவேண்டும்" என்று முன்னிலும் பணிவாகப் பேச, உடனே கதவு திறந்துவிடப் பட்டது. மாநிறமும், இளந்தொந்தியும், அழகான பரந்த முகமும், தாம்பூலச் சிவப்பேறிய சிரித்தவாயுமாய்த் தோன்றிய ராயர் சாரங்கபாணி முதலியாரது முகத்தை அன்பாக உற்று நோக்கி "தாங்கள் யார் என்பது தெரியவில்லையே! என்னிடமா தாங்கள் பேசவேண்டுமென்று சொன்னது? என்ன சமாசரத்தைப்பற்றிப் பேச வேண்டும்?" என்று கேட்டுக்கொண்டு கதவிற்கு வெளியில் வந்தார்.

ராயர் கதவைத் திறந்து விட்டவுடனே சாரங்கபாணி முதலியார் நிரம்பவும் பணிவாகவும் மரியாதையாகவும் தமது இருகைகளையும் குவித்து "சாமீ! நமஸ்காரம்! என்னைத் தாங்கள் பல தடவைகளில் பார்த்திருக்கிறீர்களே. அடையாளந் தெரியவில்லையா?" என்று கூறினார். ராயர் சந்தேகமும் மனக்குழப்பமு மடைந்து முதலியாரின் திருமேனியை உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் ஏறஇறங்க இரண்டு மூன்று தடவை பார்த்து "நான் பார்த்திருக்கலாம். ஆனாலும் ஞாபகம் உண்டாகவில்லை. இந்த இடத்தில் நான் ஒரு தினத்திற்குள் ஆயிரம் மனிதரைப் பார்க்கிறேன். அவர்களெல்லோரும் என்னுடைய அடையாளத்தைக் கண்டு கொள்வது சுலபம். அத்தனை

பேருடைய அடையாளமும் என் மனசில் நிற்பது சாத்தியமான காரிய மல்ல அல்லவா. இருக்கட்டும். தங்களுக்கு என்னால் இப்போது என்ன காரியம் ஆகவேண்டும்? சீக்கிரம் சொல்லுங்கள். எங்களுடைய கடையை நாங்கள் மூடிய பிறகு இராக்காலத்தில் திறந்து அன்னியரை உள்ளே வரவிட்டாலும், அல்லது, நாங்கள் அநாவசிய மாக வெளியில் போனாலும் எங்கள் முதலாளி கோபித்துக் கொள் வார். ஆகையால், தங்களுடைய உத்தேசம் என்ன என்பதை சீக் கிரம் சொல்லுங்கள். நான் கதவை மூடிக்கொண்டு உள்ளே போக வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட முதலியார் கும்பிட்ட கைகளைக் கீழே விடா மலும், திறந்து காட்டிய பற்களை மறைக்காமலும் பணிவாக ராயரைப் பார்த்து "சாமீ! வேறொன்றுமில்லை. தேனும்பேட்டையில் ஒரு ஜெமீந்தார் ஐயா இருக்கிறார். அவருக்கு நான் ஒரு வீணை வாங்கிக் கொண்டு போகிறேன். அந்த வீணை ஒரு பிரம்மாண்டமான பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியை நாங்கள் எங்களுடைய குதிரை வண்டியில் வைத்து தேனும்பேட்டைக் குக் கொண்டு போகிறோம். குதிரைவண்டி பின்பக்கம் சரிவாக இருக்கிறது. வீணைப் பெட்டியின் அடிப்பக்கத்தில் சகடைகள் வைத்திருக்கிறார்கள். வண்டி ஓடும்போது பெட்டி நகர்ந்து நகர்ந்து பின்னால் போகிறது. இன்னம் கொஞ்ச தூரம் போவதற்குள் பெட்டி கீழே விழுந்து விடும்போல இருக்கிறது. அதை வண்டி யோடு சேர்த்துக் கட்ட ஒரு கயிறு தேவை. இந்த இடத்தில் இந்த இரவில் வேறே எங்கே போய்க் கயிறு கேட்பதென்பது தெரிய வில்லை. எனக்கு இது புதிய இடம்; இவ்விடத்தில் யாரும் பழக்க மில்லை. தாங்கள் தயவுசெய்து ஒரு கயிறு சம்பாதித்துக் கொடுத் தால், அதற்குக் கிரயம் வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன். அவ்வளவுதான் என் தேவை; வேறொன்றுமில்லை." என்றான்.

உடனே ராயர் மிகுந்த கிலேசமடைந்தவராய்க் கீழே குனிந்து தமது தலையைச் சொறிந்துகொண்டார்; எதிரில் நிறுத்தப்பட்டிருந்த குதிரை வண்டியையும், வண்டியின் பின்புறத்திலும் முன்புறத்திலும் பெரிதாக நீட்டிக்கொண்டிருந்த வீணைப்பெட்டியையும் பார்த்தார்;

சிறிதுநேரம் யோசனை செய்தவராய், "ஐயா! இந்தக் கடையின் முதலாளி இப்போது இங்கே இல்லை. நாங்களெல்லோரும் சம்பள ஆள்கள். உள்ளே கயிறு இருக்கிறது. எங்களை நம்பி எஜமானர் இங்கேயுள்ள சொத்து முழுவதையும் விட்டு வைத்திருப்பதால், அவருக்குத் தெரியாமல் இங்கே இருந்து ஒரு துரும்பை எடுத்துக் கொடுத்தாலும், அது நம்பிக்கை துரோகமாகும். இந்த அவசர சமயத்தில் உங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆசை எனக்குப் பூர்த்தியாக இருந்தாலும், எனக்குச் சொந்தமில்லாத வஸ்துவை எடுத்து தானம் வழங்க என் மனம் சம்மதிக்கவில்லை. இங்கே எனக்குத் தெரிந்த மனிதர் ஒருவர் இருக்கிறார். இவரிடம் போய்க் கேட்டுப் பார்க்கிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள். நான் ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்" என்று கூறிவிட்டு, உள்பக்கத்திலிருந்த ஒரு சிறுவனைப் பார்த்து "அடே அம்பி! கதவை மூடிக்கொண்டு ஜாக்கிரதையாக இரு. நான் இதோ ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து ஹைரோட்டோடு வடக்கு திக்கில் விசையாக நடந்து சென்று மறைந்து போனார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் "அடேய்! யாரங்கே வண்டி நிறுத்தி இருக்கிறது?" என்று அதட்டலான ஒரு குரல் கேட்டது. அடுத்த நிமிஷம், பைசைகில் வண்டியில் ஏறிக்கொண்டிருந்த போலீஸ் சார்ஜண்டு துரை ஒருவர் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தார். அவ்வாறு வந்தவர் போலீஸ் சார்ஜண்டு துரை என்பதை உணரவே, சாரங்கபாணி முதலியார் திடுக்கிட்டு மிகுந்த திகிலும் குழப்பமும் அடைந்து விட்டார். அவரது உடம்பு அவரை அறியாமலே கிடுகிடென்று ஆடியது. அந்த சட்டைக்கார துரை பரமதுஷ்டர்போலக் காணப்பட்டாராதலால், அவர் ஒருகால் வீணைப்பெட்டியைத் திறந்து பார்த்துவிடப் போகிறாரே என்ற கவலையும் மனக்கலக்கமும் கிலியும்கொண்டு தத்தளித்தார். வண்டியின் முன்பக்கத்தில் உட்காராதபடி பெட்டியின் மூடியைத் தூக்கிப் பிடித்து உள்புறத்தில் காற்று வீசும்படி செய்துகொண்டிருந்த வண்டிக்காரன் போலீஸ் சார்ஜண்டுதுரை வந்துவிட்டாரென்று உணரவே, திடுக்கிட்டு நடுநடுங்கி, அவர் தங்களைப் பிடித்துக்கொண்டு போய்விடுவாரோ என்ற திகிலும் கவலையும் கொண்டவனாய் உடனே மூடியைச் சடேரென்று போட்டு பெட்டியை மூடி

182822

விட்டு ஒன்றையும் அறியாத பரம ஸாதுபோலக் காணப்பட்டு "ஏனைய்யா ஓட்டலாமா?" என்று சாரங்கபாணி முதலியாரை நோக்கி வினவினான்.

உடனே சாரங்கபாணி முதலியார் சார்ஜண்டு துரையைப் பார்த்துப் பணிவாக சலாம் வைத்து இங்கிலீஷ் பாஷையில் வணக்கமாகப் பேசத்தொடங்கி "வண்டி இப்போதுதான் வந்து நின்றது. இந்த வண்டியில் இருக்கும் வீணைப்பெட்டி வழுக்கிவழுக்கி வெளியில் வருகிறது. அதைக் கட்டுவதற்கு ஒரு கயிறு வாங்க மனிதர் போயிருக்கிறார். அவர் ஒரு நிமிஷத்தில் வந்துவிடுவார். நான் அதிக நேரம் நிற்கமாட்டேன். இதோ ஓட்டிக்கொண்டு போய்விடுகிறேன். துரையவர்கள் கோபிக்கக்கூடாது" என்று நிரம்பவும் நயமாய்க் கூற, அதைக் கேட்டு சாந்தமடையாமல் மிகுந்த கோபமடைந்த சட்டைக்கார துரை நிரம்பவும் பலமாகக் கூச்சலிட்டு இங்கிலீஷூம் தமிழும் கலந்த அழகிய மணிப்பிரவாள நடையில் பேசவாரம்பித்து "அடே யார் ஓய் நீ? ஒனக்குத் தலையிலே மூலையில்லே. நீ சுத்தக் கல்தையாயிருக்கிறே. ஜனங்க நடக்கிற சர்க்கார் ரோட்டுலே, எத்தினி நேரம் வண்டி நிறுத்தறது? ஒன்னெ நூசன்ஸூ சார்ஜ் பண்ணப்போறேன். ஓட்டு ஸ்டேஷனுக்கு" என்றார்.

உடனே சாரங்கபாணி முதலியார் முன்னிலும் அதிகமாகக் குனிந்து குனிந்து துரைக்குப் பத்துப் பதினைந்து சலாம்போட்டு "இதோ ஆய்விட்டது துரைகளே! மனிதர் ஒரு கயிறு கொண்டு வரப்போயிருக்கிறார். அவர் இன்னம் ஒரே நிமிஷத்தில் வந்துவிடுவார். இந்தப் பெட்டியை வண்டியோடு சேர்த்துக் கட்டாவிட்டால், வண்டி ஓடும்போது, இது வழுக்கி வழுக்கிப் பின்னால் வந்து கீழேவிழுந்துவிடும். அதற்காக நிற்கிறோம்" என்றார்.

அதற்குள் வடக்கு திக்கிலிருந்து ராயர் கயிறும் கையுமாய் விரைவாக அங்கே வந்து "எங்கேயும் கயிறு கிடைக்கவில்லை. பைகிராப்ட்ஸ் ரோட்டு முனையிலிருக்கும் கயிற்றுக்கடைக்குப்போய் இதை வாங்கிக் கொண்டு வந்தேன்" என்று கூறிய வண்ணம் கயிற்றை சாரங்கபாணி முதலியாரிடம் கொடுக்க, போலீஸ் துரையின் கோபத்திற்கு இலக்காய்த் தாம் என்ன செய்வதென்பதையறியாது தவித்து நின்ற முதலி

யார் அந்த அபாய வேளையில் தன்னைக் காப்பாற்றிவிட்ட ராயரிடத்தில் அளவற்ற நன்றி விசுவாசமும் வணக்கமும் காட்டி "சுவாமிகளே! தாங்கள் செய்த இந்த உதவியை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன். துரை கோபித்துக் கொள்ளுகிறார். நான் மறுபடி நாளைய தினம் வந்து தங்களோடு சாவகாசமாய்ப் பேசுகிறேன். இந்தக் கயிற்றின் கிரயத்தையும் அப்போது தங்களுக்குச் சேர்த்துவிடுகிறேன்." என்று கூறிய வண்ணம் கையும் கயிறுமாய் சடக்கென்று வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டு பெட்டிக்குக் கீழே கயிற்றைக் கொடுத்து அதை வண்டியோடு சேர்த்து இறுக்கிக் கட்டினார். அப்போதும் தாறுமாறுகக் கூச்சலிட்டு ஏதேதோ வசை மொழிகளை உபயோகித்துக்கொண்டிருந்த போலீஸ் துரை ஒருவேளை பெட்டியைத் திறந்து பார்த்துவிடப்போகிறாரே என்ற முன்யோசனை கொண்டவராய்த் தமது சட்டைப்பையிலிருந்த பூட்டை ரகஸியமாக வெளியில் எடுத்து வீணைப்பெட்டியைப் பூட்டித் திறவுகோலை வண்டிக்கூண்டில் ஒளித்து வைத்துவிட்டார். சார்ஜண்டு துரை பெட்டியைத் திறக்கச்சொன்னாலும், தாம் தமது சட்டைப்பை முதலிய இடங்களில் தேடிப் பார்த்துவிட்டு, திறவுகோல் எங்கேயோ விழுந்து காணாமல் போய் விட்டதாகப் பாசாங்கு செய்து வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விடலாம் என்ற நினைவினால் அவ்வாறு திறவுகோலை ஒளித்து வைத்துவிட்டுப் பின்புறம் பார்த்து "ராயர் சுவாமிகளே! நமஸ்காரம். நான் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறேன். நாளையதினம் மறுபடியும் வந்து தங்களைப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு துரையைப்பார்த்து "துரைகளே! சலாம்! எங்கள் வேலை ஆய்விட்டது, வண்டியை இதோ ஓட்டிக்கொண்டு போகிறோம்" என்று கூறி வண்டிக்காரனைப் பார்த்து சைகைசெய்ய, அவன் குதிரையை ஊக்கி வண்டியை ஓட்டத் தொடங்கினான். வண்டி அவ்விடத்தை விட்டு தெற்கு திக்கில் விசையாக ஓடியது.

அப்போதும் ரஸ்தாவிலேயே நின்றுகொண்டிருந்த போலீஸ் சார்ஜண்டு துரை, கதவை மூடிக்கொண்டு கடைக்குள் போக முயன்ற ராயரைப் பார்த்து "ஓ ஐயரே! இங்கே வா, போவலாம்" என்று அதட்டலாகக் கூற, அதைக் கேட்ட ராயர் முரடனான அந்த சட்டைக்கார துரை தம்மை அவமரியாதைப்படுத்த அழைக்கிறானே என்ற

கவலையும் சஞ்சலமும் அடைந்தவராய்த் திரும்பி ரஸ்தாவிற்குப போய் துரைக்கெதிரில் மௌனமாக நின்றார்.

உடனே சார்ஜண்டு துரை:—இந்த மனிசன் யார் ஓய்? ஒனக்குத் தெரியுமா ?

ராயர்:—எனக்குத் தெரியாது. வண்டியிலிருந்து பெட்டி வழுக்கி வழுக்கிக் கீழே வருகிறதென்று என்னிடம் சொல்லி, அதை வண்டியோடு சேர்த்துக் கட்டுவதற்கு ஒரு கயிறு கேட்டார். அதை நான் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தேன், அவ்வளவுதான் எனக்குத் தெரியும். மற்ற சங்கதி எதுவும் எனக்குத் தெரியாது.

சார்ஜண்ட்:—பொட்டிக்குள்ற என்ன ஜாமான் இருக்குது தெரியுமா ஒனக்கு ?

ராயர்:—அந்தப் பெட்டிக்குள் வீணை இருக்கிறதாம். தேனும் பேட்டையிலுள்ள ஒரு ஜெமீந்தாருக்கு அதை வாங்கிக்கொண்டு போகிறாராம்.

சார்ஜண்ட் :—அப்பிடியானு வண்டி தேனும் பேட்டைக்கா போவுது ?

ராயர்:—அப்படித்தான் இருக்கும்.

சார்ஜண்ட்:—அந்த ஜெமீந்தார் யார் தெரியுமா ?

ராயர்:—தெரியாது.

சார்ஜண்ட்:—வீணையின்னு, அது என்ன ஓய் ?

ராயர்:—அது பாட்டுப்பாடுகிற ஒரு வாத்தியம் ; தம்புராவைப் போல இருக்கும்.

சார்ஜண்ட்:—டாம்புர்ருவெப் போலெ இருக்குமா ? அந்த பிளடி டாம்புர்ரு எப்படி யிருக்கும் ?

ராயர்:—உலக்கைமாதிரி நீளமாயிருக்கும். ஒரு பக்கத்திலே குடம்மாதிரி மாத்தினால் செய்யப்பட்டிருக்கும். மேலே தந்திகள் இருக்கும்.

சார்ஜண்ட்:—ஓ! அந்தப் பொட்டிலே ஒலக்கே, கொடம் எல்லாம் இருக்குதா? அதை யெல்லாம் நீ பாத்தியா? ஒனக்குத் தொறந்து காட்டினனா?

ராயர்:—நான் பார்க்கவில்லை துரையே!

சார்ஜண்ட்:—மொதல்லே பொட்டி தொறந்திருந்திச்சு. என்னெக் கண்ட ஒடனே அவன் பூட்டினனே! அவன் அதெத் தொறந்து ஒனக்குக்காட்டினனா இல்லியா? நெசத்தெச் சொல்லிப்புடு. பொய்ச் சொன்னக்கா, தெரியும் சேதி.

ராயர்:—இல்லை தொரைகளே! நிஜமாகச் சொல்லுகிறேன். நான் வண்டிக்குக் கிட்டவே போகவில்லை.

சார்ஜண்ட்:—அந்த டாம் பிளடி ஜெமீந்தார் பெயரு ஒனக்குத் தெரியுமா?

ராயர்:—தெரியாது—என்றார்.

உடனே சார்ஜண்ட் துரை கோபங்கொண்டு "நெஜம் சொல்லமாட்டியா? இருக்கட்டும்; நான் திரும்பி வந்து ஒனக்குவளிச்சொல்றேன்" என்று கூறித் தாறுமாறாகப் பிதற்றிக்கொண்டு தமது சைகிள் வண்டியை விசையாக நடத்திக்கொண்டு ஹைரோட்டின் வழியாகவே தெற்கு திக்கில் போகத்தொடங்கினர். சாரங்கபாணி முதலியாரது குதிரை வண்டி சுமார் ஒருபர்லாங்கு தூரத்திற்கு முன்னல் போனதானலும், அதுவாயு வேகமனோவேகமாய்ப் பறந்துபோனதாகத் தோன்றியது. பெட்டியைத் திறந்து மூடியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டிருந்த மனிதர் தம்மைக் கண்டு அதை மூடிப்பூட்டியது சார்ஜண்ட்துரையின்மனதில் சந்தேகாஸ்பதமாகத்தோன்றிக்கொண்டிருந்த நிலைமையில், அவ்விடத்திலிருந்து புறப்பட்ட வண்டி அமிதமான விசையோடு ஓட்டப்படுவதைக் காணவே, துரையினது சந்தேகம் முன்னிலும் அதிகமாய்ப் பெருகியது. ஆகவே, அவர் வண்டி சென்ற திக்கில் தமது பைசைகிளை நிரம்பவும் துரிதமாக விட்டுக்கொண்டு பின்தொடர்ந்து போகத் தொடங்கினர். அவருக்கும் முதலியாரது குதிரைவண்டிக்கும் இடையில் டிராம் வண்டிகளும், வேறு பல போக்கு வண்டிகளும் வந்து போய்க்கொண்டிருந்தமையாலும், அப்போது இரவு காலமானதாலும், சாரங்கபாணி முதலி

யாரது வண்டி சிறிது நேரத்தில் மறைந்துபோய்விட்டது. லொள்ளு துரை முன்னிலும் அதிக விசையாக வண்டியை விடுத்துக்கொண்டு ஓடி ஐஸ் அவுஸ்ரோட் போலீஸ் ஸ்டேஷன் வாசலை யடைந்தார். அந்த இடம் நாற்சந்தியாதலால், சாரங்கபாணி முதலியார் எந்த வழியாகப் போயிருப்பாரென்ற சந்தேகம் உண்டானதாலும், அவர் தேனும்பேட்டைக்குப் போகவேண்டியவர் என்பதை ராயரிடம் தெரிந்துகொண்டாராதலால், மேற்கு திக்கில் சென்ற பீட்டர்சாலையின் வழியாகத்தான் அந்த வண்டி போயிருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டவராய், துரை தமது சைகில் வண்டியையும் அதே சாலையில் விடுத்துக்கொண்டு வேகமாய் ஓடத்தலைப்பட்டார். அவ்வாறு அவர் சிறிதுதூரம் போக, அவருக்கு ஒரு பர்லாங்கு தூரத்திற்கு முன்னால், அதே குதிரைவண்டி போய்க்கொண்டிருந்தது தெரிந்தது. உடனே துரை மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் கொண்டவராய் முன்னிலும் அதிக விசையாகத் தமது வண்டியை முடுக்கி விடுத்தவராய்த் தொடர்ந்து செல்லலானார்.

வெருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேய் என்ற பழமொழிப்படி சாரங்கபாணி முதலியார் சிற்றுண்டிக் கடையண்டை போலீஸ் சார்ஜண்டைப்பார்த்ததுமுதல் ஒருவித திகிலும்,மனக்கலக்கமும், சஞ்சலமும் அடைந்தவராய், அவ்விடத்தை விட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டுமென்ற எண்ணங் கொண்டவராய் வண்டிக்காரனைத் தூண்ட, அவன் குதிரையை நன்றாக அடிக்கடித்து அது தலைகால் தெரியாது ஒரே வாராக வாரிக்கொண்டு பறக்கும்படி செய்துவிட்டானாதலால், பின்னால் வந்த துரையின் சைகில் அதை எட்டிப் பிடிக்கக் கூடாமல் போய்விட்டது. சாரங்கபாணி முதலியார் மறுபடியும் வீணைப்பெட்டியின் மேல்மூடியைத் திறந்து அதை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, இன்னொரு கையால் வண்டிக்கூண்டை இறுகப்பிடித்துக்கொண்டவராய்ப்பின்புறத்தில் பார்த்தபடியேஇருக்க, வெகு தூரத்திற்குப் பின்னால், சார்ஜண்ட் துரையின் வடிவம் காணப்படுவதாக அவருக்குப் புலப்பட்டது. ஆகவே, அவரது தேகம் பதறியது; கைகால்களெல்லாம் வெடவெடவென்று ஆடுகின்றன; துரை தொடர்ந்து வருவதால், வண்டியை எவ்வளவு அதிக விசையாய் ஓட்டமுடியுமோ அவ்வளவு வேகமாய் ஓட்டும்படி வண்டிக்கார

னைத் தூண்டிக்கொண்டே இருந்தார். அபாரமான விசையில் வண்டி போகப் போக, அதன் வில்வைத்த சக்கரங்கள் மேல்பாகத்தைத் தூக்கிவிட்டமையால், சாரங்கபாணி முதலியார் வீணைப்பெட்டிக்கும், சாய்ந்துகொள்ளும் பலகைக்குமாய் மோதப்பட்டதால், அவரது தோற்றம் கடவாத்தியம் வாசிப்பவரது தோற்றம்போல இருந்தது. பெட்டிக்குள் கிடந்த கூனற்கிழவி தடார் புடாரென்று பந்து போல அங்குமிங்கும் மோதப்பட்டவளாய்த் துவண்டு கிடந்தாள். உள்ளே இருப்பவள் தெளிவடைந்து விழித்துக்கொள்ளப் போகிறாளே என்ற அச்சம் அவரது மனதில் இருந்ததானாலும், போலீசார் தம்மைப் பிடித்துக்கொள்வார்களே என்ற அச்சத்தின் முன் அது பஞ்சாய்ப் பறந்துபோய்விட்டது. ஆகவே, அவர் மேன்மேலும் வண்டிக்காரனை துரிதப்படுத்தியபடி தமது பார்வையைப் பின்பக்கத்திலேயே வைத்துக்கொண்டு கவலையும் திகிலும் கலக்கமுமே வடிவாக உட்கார்ந்திருந்தார். வெகு தூரத்திற்குப் பின்னால் வந்தது சில சமயங்களில் சார்ஜண்டுதுரைபோலவும் மற்ற சமயங்களில் அவர் அல்ல போலவும் தோன்றியதாகையால், சாரங்கபாணி முதலியாரது மனத்தில் மாறி மாறிக் கலக்கமும் அமைதியும் தோன்றிக்கொண்டிருந்தன. பின்னால் வந்தவர் உண்மையிலேயே போலீஸ் சார்ஜண்டு துரையாகவே இருந்தாலும், அவர் தம்மைப் பிடித்துக்கொள்ளாமல் எங்கேயாவது வேறே அலுவலாய்ப் போகக்கூடுமென்ற நினைவும் முதலியாரது மனத்தில் எழுந்து ஒருவித ஆறுதலையும் துணிவையும் உண்டாக்கிக்கொண்டிருந்தது. அவ்வாறு முதலியார் பீட்டர் சாலையில் வெகு தூரம் வரையில் போய் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியின் வாசலையடைவதற்குள் சார்ஜண்டு துரையின் சைகில் வண்டி முதலியாரது குதிரை வண்டிக்கு சுமார் 10 கஜதூரத்தில் வந்துவிட்டது. அவரைக் கண்ட முதலியாரது தேகம் அவரை மிஞ்சி கிடுகிடென்று ஆடியது; சார்ஜண்டு துரை வேறே எங்கேயாவது போகும் கருத்தோடு வந்து கொண்டிருக்கலாமென்ற எண்ணத்தினால் முதலியார் தமது மனத்தை ஒருவிதமாக சாந்தப்படுத்திக்கொள்ள நிரம்பவும் பாடுபட்டாரானாலும், அதற்கெல்லாம் அடங்காமல் அவரது மனம் பதறித் தவித்தது. தாம் திறந்து பிடித்துக்கொண்டிருந்த வீணைப் பெட்டியின் மேல்மூடியை அவர் உடனே சடக்கென்று மூடித்

தாளிட்டுப் பூட்டி திறவுகோலை முன்போல வண்டிக்கூண்டில் சொருகி விட்டு, ஒன்றையுமறியாத பரமஸாதுபோலவும், பின்னால் வந்த சார்ஜண்டு துரையைக் கவனிக்காதவர்போலவும் அசட்டையாக உட்கார்ந்திருந்தார். வண்டி அமிதமான விசையோடு போனால், அதைக் கண்டு சார்ஜண்டு துரை சந்தேகப்படுவாரென்ற எண்ணங்கொண்ட முதலியார் வண்டிக்காரனிடம் தமது முகத்தை நீட்டி "வண்டி மெதுவாய்ப் போகட்டும்; சார்ஜண்டு துரை வருகிறான். அவன் போனபிறகு வேகமாய் ஓட்டலாம்" என்று காதோடு கூறினார். உடனே வண்டியின் வேகம் குறைந்தது. சார்ஜண்டுதுரை வண்டியின் உட்புறத்தில் நடந்தவற்றையெல்லாம் கடைக்கண்ணால் கவனித்தும் கவனிக்காதவர்போலக் கிழேகவித்த முகத்தோடு தமது சைகில்வண்டியை விசையாக விடுத்துக்கொண்டு குதிரைவண்டியைக் கடந்து முன்னால் சென்று அவ்விடத்தில் குறுக்கிட்ட டிராம்வண்டிப் பாதையோடு வடக்குதிக்கில் திரும்பிப்போய்விட்டார். அவ்வாறு சார்ஜண்டு துரை வேறு ரஸ்தாவில் போய்விட்டதைக் கண்ட சாரங்கபாணி முதலியாருக்கு அப்போதே ஒழுங்கான மூச்சு வரத்தொடங்கியது. அவரது மனம் சாந்த மடைந்தது. உடம்பும் தொந்தியும் ஓய்ந்து அப்பாடா வென்று ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டன. மறுபடியும் முதலியார் பூட்டை விலக்கி விட்டு வீணைப்பெட்டியின் மூடியைத் திறந்து பிடித்துக்கொண்டு "அடே! இனிமேல் வண்டி வேகமாய்ப் போகட்டும். துரை வேறே எங்கேயோ போகிறான். நம்மைப்பற்றி அவன் சந்தேகங்கொண்டுவரவில்லை" என்றார். மறுபடியும் வண்டி விசையாய்ப் போக ஆரம்பித்து அவ்விடத்தில் குறுக்கிட்ட டிராம்வண்டிப் பாதையைக் கடந்து, நேராக ஆயிரம் விளக்கிற்குப்போன ரஸ்தாவின் வழியாகச்சென்றது.

வண்டியை அதே வழியில் கால் மைல் தூரம் நேராக ஓட்டிக் கொண்டுபோய், ஆயிரம் விளக்கு என்ற இடத்தில், அது மவுண்டு ரோட்டில் கலக்கும் இடத்தை அடைந்து, அதன் பிறகு மவுண்டு ரோட்டின் வழியாகவே சென்று, அதற்கப்பால் சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள தேனும்பேட்டைக்குப் போய்ச் சேரவேண்டு மென்பது முதலியாரது கருத்தாதலால், அவர் முன்னர் கூறப்பட்டபடி சார்ஜண்டை விட்டுப்பிரிந்த பிறகு பீட்டர் சாலையிலேயே நேராக வண்டியை விடுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார். வண்டியும் விசை

யாகவே போய்க்கொண்டிருந்தது. வீணைப்பெட்டி வண்டியோடு சேர்த்து இறுகக் கட்டப்பட்டுப்போயிருந்தமையால், அது அசையாமல் இருந்ததானாலும், அதற்குள் பின்பக்கத்துக் கோடியில் உருண்டைபோலத் திரண்டு கிடந்த கூனற்கிழவி தடார் புடாரென்று பெட்டியின் பக்கங்களில் புடைபுண்டு கிடந்தாள். வண்டியின் உட்புறமே இருளடைந்திருந்தமையால், அதற்குள் மூடப்பட்டிருந்த பெட்டிக்குள் கிடந்த கிழவியும் இருளில் ஆழ்ந்து மறைபட்டுக் கிடந்தமையால், அவளது நிலைமையை சாரங்கபாணி முதலியார் அறிந்துகொள்ளாதவராய் வீற்றிருந்தார். தாம் போலீசாரிடம் அகப்படவில்லையென்றும், அதிசீக்கிரத்தில் பெட்டி ஜெமீந்தாருடைய படுக்கையறைக்குப் போய்ச் சேர்ந்துவிடுமென்றும், உடனே வைரமோதிரம் தமது கைவிரலில் ஏறி ஜ்வலிக்குமென்றும் முதலியார் ஆநந்தமாக எண்ணமிட்டவராய் இருந்தார். அந்த ரஸ்தாவின் இருபுறங்களிலும் பிரம்மாண்டமான விருக்ஷங்கள் வளர்ந்து ஆகாயத்தைப் போர்த்து மறைத்துக்கொண்டிருந்தன. அந்த இடத்தில் வீடுகள், அல்லது, பங்களாமுதலிய மனிதரது வாசஸ்தலமே காணப்படாமல், தோட்டமும், குளமும், மதிட்சுவர்களும், வேலிகளுமே நிறைந்த வெற்றிடமே காணப்பட்டதாகையால், அந்த வண்டி சென்ற சமயத்தில் அந்த இடம் முற்றிலும் நிர்மாநுஷ்யமாகத் தோன்றியது. அந்த ரஸ்தாவில் சுமார் ஒன்றரை பர்லாங்கு தூரம் சென்ற காலத்தில் முதலியார் தற்செயலாகப் பின்புறத்தில் தமது முகத்தைத் திருப்பிப் பார்த்தார். பார்க்கவே சுமார் நூறுகஜ தூரத்திற்குப் பின்னால், நாலைந்து மனிதர்கள் பைசைகிள் வண்டிகளில் உட்கார்ந்துகொண்டு நிரம்பவும் விசையாக வந்துகொண்டிருந்ததைக் கண்டார். காணவே, முதலியாரது மனம் சடக்கென்று திகில் கொண்டது. அடி வயிற்றில் ஒருவிதமான குழப்பமும், கலக்கமும், உபத்திரவமும் உண்டாகத் தொடங்கின. பின்னால் தொடர்ந்து வந்தபைசைகிள் வண்டிகள் அபாரமான விசையோடு வந்தது நன்றாகத் தெரிந்ததாகையால், அவர்கள் தம்மைப்பிடித்துக் கொள்ளவே வருகிறார்கள் என்ற பீதி அவரது மனத்தில் தோன்றி அவரை வதைக்க வாரம்பித்தது. அவர் உடனே வண்டிக்காரனைப் பார்த்து "அடேய்! அடேய்! பின்னால் யாரோ மனிதர் நம்மைத் துரத்திக்கொண்டு வருகிறார்கள். வேகமாய் ஓட்டு. இதோடு குதிரை செத்தாலும் பாதகமில்லை. அவர்

கள் நம்மிடம் வராமல் நாம் மாயமாய்ப் பறந்துபோக வேண்டும்'' என்று நிரம்பவும் ஆவலோடு பதறிக் கூறினர். அதைக் கேட்ட வண்டிக்காரன் அவரைக் காட்டிலும் பன்மடங்கு அதிகரித்த கிலியும், நடுக்கமும் அடைந்து தனது பலம் கொண்ட மட்டும் காலை இழுத்துக் குதிரையின் வயிற்றில் ஓர் உதை கொடுத்து, சாட்டைவாரால் சுளீர் சுளீரென்று பத்துப்பதினைந்து அடிகள் அதன் விலாவில் கொடுக்க, எதிர்பாராத அந்த உபத்திரவத்தைத் தாங்க மாட்டாத அந்த உன்னதப்புரவி வீரிட்டு ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு திடுக்கிட்டுத் துள்ளிக்குதித்து நாற்கால் பாய்ச்சலில் ஒரே பிடுங்காய்ப் பிடுங்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தது. வண்டியும், தாமும் ஆகாயத்தில் பறப்பதுபோல உணர்ந்தாரே யன்றி, தாம் குதிரை வண்டியில் போவதாகவே முதலியார் எண்ணவில்லை. அவரது தொந்திக்குள்ளிருந்த குடல்களும், அரைப்பாகம், கால் பாகம் ஜீரணமாயிருந்த ஆகாரமும், மற்றுமுள்ள வஸ்துக்களும் மர்த்தனம் செய்யப்பட்டு இன்னதென்று கண்டுபிடிக்க முடியாத ஒரு நூதனக் கதம்ப மாகி விட்டன. அவரது மூளை குழம்பி தாம் ஆகாயத்தில் நீந்துகிறோம் என்ற நினைவை அவரது மனதில் உண்டாக்கியது. அவ்வாறு அவர் சென்று கொண்டிருக்க, அடுத்த நிமிஷம் தபீரென்ற ஒரு பெருத்த ஓசையுண்டாயிற்று. குதிரையும் வண்டியும் வலது பக்கத்தில் சாய்ந்து ஒரு பெருத்த பள்ளத்தில் விழுந்துவிட்டன. வீணைப்பெட்டியின் மேல் மூடி படாரென்று திறந்துகொண்டது. துபாஷ் முதலியார் பொறிகலங்கிப் போனவராய் வீணைப்பெட்டிக்குள் விழ, அதற்குள் கிடந்த கிழவி எழும்பிவந்து அவர்மீது குதிரை சவாரி செய்ய, இருவரது உடம்புகளும் ஒன்றன்மேலொன்று விழுந்து மோதித் தாறுமாறாய்ப் பின்னிக்கொண்டு, வண்டிக்கும் பெட்டிக்கும் இடையில் சிக்கிக்கொண்டன. வண்டிக்காரன் மாத்திரம் அந்த ஆபத்தை சரியானகாலத்தில் உணர்ந்து சடாரென்று தாவிக்குதித்து பள்ளத்தில் விழாமல் தப்பி ரஸ்தாவில் குதித்துவிட்டான். முதலியாருக்குப் பல இடங்களில் அடிபட்டதானாலும் அவருக்கு அதிகமான அபாயம் எதுவும் நேரவில்லை யாதலால், அவர் தெளிவான அறிவுடனேயே பள்ளத்தில் வண்டிக்குள் தாறுமாறாக சிக்கிக்கொண்டு கிடந்தார். ஆனாலும், தமக்கு நேர்ந்த விபத்து

இன்னவிதமானது என்பதை அவர் உள்ளபடி யூகித்துக்கொள்ள மாட்டாதவராய் ஸ்தம்பித்துப்போய் அப்படியே கிடந்தார். கூனற்கிழவியின் தேகம் அப்போதும் அசைவற்றுக் கிடந்ததாகையால், அவள் மயக்கமாய்க்கிடக்கிருளோ, அல்லது, இறந்துபோய்விட்டாளோ என்ற குறிப்பே தெரிந்துகொள்ளக் கூடாமலிருந்தது. வண்டியிலிருந்து ரஸ்தாவில் குதித்த வேலைக்காரனுக்கு அப்போதே உண்மை விளங்கியது. அந்த இடத்தில் ரஸ்தாவின் கீழ்ப்பாகத்தில் புதைக்கப்பட்டிருந்த தண்ணீர்க்குழாயில் ஏதோ கெடுதல் இருந்ததைச் செப்பனிடுவதற்காக ரஸ்தா வேலைக்காரர்கள் அவ்விடத்தில் நீளமாய்க் குழி வெட்டி இருந்தார்களென்பதும், அதற்குள் தமது வண்டி வீழ்ந்துவிட்டதென்பதுமான தகவல் உடனே தெரிந்துபோய்விட்டது. அவ்விடத்தில் குழி வெட்டப்பட்டிருப்பதைப்பற்றி அபாயக்குறி காட்டுவதற்காக அதற்குப் பக்கத்தில் ஒரு மூங்கிலில் கட்டித்தொங்கவிடப்பட்டிருந்த சிவப்பு லாந்தர் என்ன காரணத்தினலோ அணைந்துபோயிருந்ததும் உடனே தெரிந்துபோயிற்று. குதிரையின் கால்கள் மடங்கிப்போன நிலைமையில் அது அந்தப் படுகுழியில் தாறுமாருக விழுந்து, தனது உடம்பை அப்புறம் இப்புறம் அசைத்துக்கொள்ளவும் எழுந்திருக்கவும் இயலாத நிலைமையில் கிடந்ததையும், அதுபோலவே வண்டியின் ஒரு பக்கத்துச் சக்கரம் குழிக்குள் விழ, மற்றது ஆகாயத்தில் போக, வண்டி சாய்ந்து குழிக்குள் புகுந்துகொண்டிருந்ததையும் கண்ட வேலைக்காரன் தான் என்ன செய்வதென்பதை அறியாதவனுய்த் தவித்துத் தத்தளித்துப்போய் பிரமித்து இரண்டொரு நிமிஷநேரம் அப்படியே மரம்போல நின்றுவிட்டான். வண்டிக்குள்ளும், பெட்டிக்குள்ளும் இருந்த இருவரும் உயிரோடிருக்கிருர்களோ, அல்லது, இறந்துபோய்விட்டார்களோ என்ற கவலையும் திகிலும் தோன்றியதானுலும், தம்மைத் துரத்திக்கொண்டு பின்னல் வந்த மனிதர்கள் வந்து தமது சூதை அறிந்துகொள்ளப் போகிருர்களே என்ற பீதியே மற்றயாவற்றையும்விட ஆயிரமடங்கு அதிகமாய்ப் பெருகி அவனது மனத்தில் விவரிக்க இயலாத பெருத்த கலவரத்தை உண்டாக்கியது. அந்த நிலைமையில் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு தான் தப்பித்துக்கொண்டு ஓட்டம் பிடித்து விடலாமா என்ற எண்ணம் அவனது மனத்தில் எழுந்து அவனதுகாலைப்பிடித்துத்

தள்ளியதானாலும், அதோடு தனது உத்தியோகம் போய்விடுமென்ற அச்சம் எழுந்து இன்னொரு பக்கத்தில் அவனை அவ்விடத்தில் நிறுத்தியதாகையால், அவன் பிரமிப்படைந்து நின்ற தருணத்தில் ஐந்து சைகிள் வண்டிகள் அவ்விடத்திற்கு வந்து அவனையும், வண்டி குதிரைகளையும் வளைத்துக்கொண்டன. அவற்றின்மீதிருந்த நான்கு போலீஸ் ஜெவான்களும் நமது லொள்ளுதுரையும் உடனே வண்டியை விட்டுக் கீழே இறங்கினர். தாம் பின்னால் துரத்திக்கொண்டு வந்ததைக் கண்டு பயந்து குதிரையைத் தலைகால் தெரியாமல் நிரம்பவும் விசையாக ஓட்டியதால், குதிரையும் வண்டியும் பள்ளத்தில் வீழ்ந்துவிட்டன என்பதை ஒரு நொடியில் கண்டுகொண்ட போலீஸார் ஐவரும் பதைபதைத்துப் பாய்ந்து, தம்மிடமிருந்த பேனாக்கத்திகளை எடுத்துக் குதிரையையும், வண்டியையும் ஒன்றாய்ச் சேர்த்துக்கொண்டிருந்த தோல் வார்களையும் கயிறுகளையும் அறுத்து, வண்டியை வேறாக்கி, அதை அலாக்காய்த் தூக்கி ரஸ்தாவின்மீது கொணர்ந்து வைத்துவிட்டு, குதிரையை மெதுவாகக் கிளப்பி நிறுத்தி அதை அந்தக் குழியிலிருந்து மேலே ஏற்றிவிட்ட பின்பு, வண்டியண்டை போய், அதற்குள், பெட்டிக்கும் வண்டிக்கும் நடுவில் கால்களை மாட்ட வைத்துக்கொண்டு கிடந்த சாரங்கபாணி முதலியாரை மெதுவாக வெளிப்படுத்தினர். அப்போது போலீசாரில் இருவர் இரண்டு கை லாந்தர்களை எடுத்துக் கொளுத்திக்கொண்டனராதலால், அவற்றின் வெளிச்சம் பளிச்சென்று எதிர்க்கப்பத்தில் போய்ப் பிரகாசித்தது. அவற்றின் உதவியைக் கொண்டு போலீஸார் வண்டிக்குள்ளிருந்த பெட்டியையும், அதற்குள் மூட்டைபோலச் சுருட்டிமுடக்கிக்கொண்டு கிடந்த கூனற்கிழவியையும் ஆராய்ச்சி செய்து பார்த்தனர். பார்க்கவே, அவர்களது வியப்பும் திகைப்பும் அதிகரித்தன. அவர்கள் கிழவியைப் புரட்டிப் பார்த்தனர். அவள் பிணம்போலக் கிடந்தாள். அவளது உடம்பில் பல இடங்களிலிருந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்ததைக் காணவே, அவள் இறக்கவில்லையென்றும் மூர்ச்சித்துக் கிடக்கிறாளென்றும் போலீஸார் நிச்சயித்துக் கொண்டனர்.

தமது சூதைப் போலீஸார் கண்டு கொண்டனரே என்றும், அதனால் தமக்கு எவ்விதமான அவமானமும் தண்டனையும் நேருமோ என்றும் பெருத்த திகிலும் குழப்பமும் கொண்டு திருட்டுவிழி

விழித்து நடு நடுங்கி வெலவெலத்து நின்ற சாரங்கபாணி முதலியார் பெட்டிக்குள்ளிருந்தது வைதேகியல்ல வென்பதையும், கூனற்கிழவி யென்பதையும் அப்போதும் உணராமல் நின்று கொண்டிருக்க, இரணி யனது குடலைப்பிடுங்கி மாலையாகப் போட்டுக்கொண்ட காலத்தில் நரஸிம்மாவதாரம் எவ்வாறிருந்ததோ அது போலவே காணப்பட்ட நமது லொள்ளுதுரை "அடே! டாம் பிளடிரெட்ச்! என்னகொண்டாந் தேன்னுச் சொன்னே! இதிலே ட்ராம்புர்ரு வாத்தியம் இருக்குதன்னு சொன்னீயல்லவா! எங்கே ஓய் அந்த டாம்புர்ரு வாத்தியம்? டாம் பிளடி பூல்! என்னே ஏமாத்திப் புடவா பாத்தே! டாம் பிளடி சீட்! நம்பகிட்ட ஒன்னேடெ மோசம் காட்டரே! டாம் ஹிபாகிரிட்! வா ஸ்டேஷனுக்கு. அடே! எல் நூத்தி நாப்பீத் துன்னு! நீ இந்த ராஸ் கலுக்குப் போலீஸ்தோடா மாட்டு. அடே! அஞ்சுநூத்தி எம் பீத்தூன்னு! நீ அந்த வண்டிக்காரனுக்குத் தோடாமாட்டு. இரண்டு கல்தேங்களேபும் ராத்திரி முல்தும் லாக்காப்பிலே போட்டு நசுக்கிச் சாறு புளிஞ்சா நெசம் தானே வருது." என்று கூறித் தமது கையி லிருந்த குதிரைச் சவுக்கை சடேர் சடேர் என்று இரண்டுதரம் வீசி, சாரங்கபாணிமுதலியாருடைய பிரஷ்டபாகத்தில் பலமாக ஒரு வீச்சு வீச, அந்தக் கொறடா முதலியாரது உடம்பிற்குள் நுழைந்து கால்பவு ண்டுமாம்சத்தை வாயில் கௌவிக்கொண்டு திரும்பி வந்தது. அந்த ஓர் அடியில் முதலியாரது உயிர் துடிதுடித்து எமலோகத்தைப் போய் எட்டிப்பார்த்து விட்டு வந்தது. அந்த வலியைத் தாங்கமாட்டாமல் குண்டுமுதலியார் "யம்மாடீ" என்று நாலடி உயரம் துள்ளிக் குதித்தார். ஒரு வண்டி நெருப்புத்தணல் அவர் மீது திடீரென்று கொட் டப்பட்டால், அவரது நிலைமை எப்படி இருக்குமோ அந்த நிலை மையை யடைந்த முதலியார் மறுபடியும் தம்மை அடிக்கத் தமது சவுக்கை உயர்த்திய லொள்ளுதுரையின்முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து அவரது பூட்ஸ்காலைப் பிடித்து தமது தலையின்மீது வைத் துக்கொள்ள முயன்றபடி "துரைகளே! என்னை அடிக்கவேண்டாம். தாங்கள் இனி என்னை அடித்தால், என் உயிர் போய்விடும்போல இருக்கிறது. நான் நிஜத்தை உள்ளபடி சொல்லி விடுகிறேன். அதைக் கேட்டுத் தாங்கள் என்னை எந்த வழியில் விட்டாலும், அது சம்மதமே." என்று கெஞ்சி மன்றாடி வாய்விட்டுக் கதறிக் குழந்தை போலத் தேம்பித் தேம்பி அழுவாரம்பித்தார்.

அப்போதும் துரையின் கோபம் தணிவடைந்ததாகத் தோன்ற வில்லை. அவர் தமது பற்களை நறநறவென்று கடித்து "அடே ப்ளடி, ராஸ்கல்! யாரை ஏமாத்தற வித்தை இது? எலுந்திரு கல்தே.' என்று தமது பூட்ஸு காலால் முதலியாரது விலாப்பக்கத்தில் ஓர் உதை கொடுக்க, ஆயிரம் தேள்கள் ஒரே காலத்தில் கொட்டினால்; ஒருவன் எப்பாடு படுவானோ அப்பாடு பட்ட முதலியார் மறுபடியும் "யம்மாடீ" என்று வீரிட்ட சப்தத்தோடு துள்ளிக் குதித்துக்கொண்டு எழுந்து தமது முப்பத்திரண்டு பற்களையும் வெளியில் காட்டியபடி மாறி மாறி சலாமும் கும்பிடும் நூற்றுக் கணக்கில் போட்டு துரை யைக் கெஞ்சிக் கூத்தாடி "துரைகளே! என்னை இம்சிக்கவேண்டாம். நான் நிஜத்தைச் சொல்லிவிடுகிறேன். அதோடு தாங்கள் ஆயிரமோ இரண்டாயிரமோ எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கித் தரு கிறேன்." என்று குனிந்து மன்றாடிக் கூத்தாட, உடனே துரை "யாருக்காவ நெஜம் சொல்றே. நீ பொய்ச் சொன்னாக்க, ஒன்னெ உசிரோடே இந்தப் பள்ளத்திலே போட்டுப் பொதைச்சுடமாட்டமா? சொல்லு நெஜத்தை" என்று அதட்டிக் கூறினார்.

அவர் அவ்வாறு சாரங்கபாணி முதலியாரோடு உரையாடிக் கொண்டிருந்த காலத்தில் இரண்டு ேபாலீஸ் ஜெவான்கள் வேலைக் காரனைப் பிடித்து 15-கஜ தூரத்திற்கு அப்பால் கொண்டுபோய் நிற்க வைத்துக் கொண்டார்கள். ஏனென்றால், சாரங்கபாணி முதலியார் சொல்லும் வரலாறு சரியானதாகத் தோன்றாவிடில், அவர் சொன் னது இன்னதென்பதை அறியாமல் தூரத்தில் நிற்கும் வேலைக்காரனை அடித்து, அவனது வாக்கு மூலத்தைக்கேட்டு, இரண்டு வாக்குமூலங் களிற்கும் வேறுபாடு இருக்குமானால் அதை வைத்துக்கொண்டு அவர்களிருவரையும் நன்றாக மர்த்தனம்செய்து நிஜமான வரலாற்றை அறிய வேண்டுமென்ற கருத்தோடு ஜெவான்கள் வேலைக்காரனை தூரத்தில் நிற்கவைத்தனர். இன்னொரு ஜெவான், பந்துபோல உருண்டையாகக் கிடந்த கிழவியைத் தூக்கி மறுபடியும் வீணைப் பெட்டிக்குள் படுக்க வைத்தான். சாரங்கபாணி முதலியாரும், வேலைக்காரனும், தாம் பெட்டிக்குள் வைத்துக் கொணர்ந்தது வைதேகி என்றே எண்ணிக்கொண் டிருந்தனராதலாலும், போலீஸார் தங்க ளைப் பிடித்துக்கொள்வார்களோ என்ற கிலியே அவர்களது மனத்தை

முற்றிலும் கவர்ந்து கொண்டிருந்ததாகையாலும், அதோடு வண்டி குழிக்குள் வீழ்ந்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியும் பயமும் அவர்களது நிலைமையை முற்றிலும் கலக்கிவிட்டனவாதலாலும், வீணைப் பெட்டிக்குள் இருள் நிறைந்திருந்தமையாலும், கடைசி வரையில், அவர்கள் வைதேகியே பெட்டிக்குள்ளிருக்கிறாளென்று எண்ணிக் கொண்டிருந்தனரேயன்றி, அவள் தனக்குபதிலாக கூனற்கிழவியை அனுப்பி இருப்பாளென்று அவர்கள் சந்தேகங் கொள்வதற்குச் சிறிதும் ஏதுவில்லாதிருந்தது. ஆனால் சார்ஜண்டு துரையும், ஜெவான்களும் பெட்டிக்குள் உண்மையில் என்ன வஸ்து இருந்ததென்பதை அறிய வேண்டுமென்ற கருத்தோடு தாக்கிக்கொண்டு வந்தவர்களாதலால், அவர்கள் குழிக்குள் வீழ்ந்து கிடந்த வண்டியையும் மனிதர்களையும் மேலே கிளப்பியபோதே உண்மையை உணர்ந்து கொண்டனர். தேகத்தில் பல இடங்களில் இரத்தக் காயங்களோடு ஸ்மரணை தப்பிக்கிடந்த கிழவியைக் காணவே, சாரங்கபாணிமுதலியார் யாரோ ஒரு கிழவியைக் கொலைசெய்யும் எண்ணத்துடனே, அல்லது, அடித்துச் சித்திரவதை செய்தோ பெட்டிக்குள் வைத்து எவருக்கும் தெரியாமல் ஊருக்கு வெளியில் ஏதோ கருத்தோடு கொண்டுபோகிறார் என்றும், தாம் தற்செயலாக ஒரு பெருத்த கொலைக்கேஸைக்கண்டு பிடித்து விட்டதாகவும் போலீஸார் எண்ணிக்கொண்டு அளவற்ற ஊக்கமும் களிப்பும் அடைந்து, உண்மையை கிரகிக்க வேண்டுமென்ற அவாவில்சாரங்கபாணிமுதலியாரைவதைக்கத்தொடங்கினர். முதலியாருக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு ஜெவான்கள் கையில் இரண்டு மூங்கில் தடிகளை வைத்துக்கொண்டு, அவர் பொய் சொன்னால், அவரது மண்டையை இரண்டாய்ப் பிளந்துவிடத் தயாராக நிற்பவர்போல பயங்கரமாக நின்றனர். சார்ஜண்டு லொள்ளுதுரை முன் கூறப்பட்டபடி ஒரு பெரிய குதிரைச்சவுக்கை முரட்டுத்தனமாக முதலியாரது பின் பக்கத்தில் உபயோகப்படுத்தி, அவர் தத்திக்குதித்துக் கதறியழும்படிசெய்து உண்மையைச் சொல்லும்படி அதட்டவே முதலியார் மாறி மாறி சலாமும் கும்பிடும் போட்டு பற்களைக் காட்டிக் கெஞ்சிக் கூத்தாடி "துரைகளே! உண்மையைச் சொல்லி விடுகிறேன். தேனாம் பேட்டையிலுள்ள ஒரு பங்களாவில் வெளியூரிலிருந்து ஒரு ஜெமீந்தார் வந்து ஜாகைவைத்துக் கொண்டிருக்கிறார். அவர் நிரம்பவும் வயசான பெரிய மனிதர். அவருடைய சம்சாரம் இறந்துபோய் விட்டாளாம். அவருக்கு யௌவனப் பருவமுள்ள ஒரு வைப்பாட்டி

தேவையென்று அவர் என்னிடம் சொன்னார். அதற்காக எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் கொடுப்பதற்கு அவர் சம்மதித்தார். திருவல்லிக்கேணி ஆலங்காத்தா பிள்ளை தெருவில் எனக்குத் தெரிந்த தேவடியாள்கிழவி ஒருத்தி இருக்கிறாள். அவளுக்கு யௌவனப் பருவமும் அழகும் வாய்ந்த ஒரு பேர்த்தி உண்டு. தக்க இடமாகப் பார்த்து, அவளைச் சேர்த்துவைக்க வேண்டுமென்று கிழவி என்னிடம் பல தடவைகளில் சொல்லி வைத்திருந்தாளாதலால், நான் அந்தக் கிழவியிடம் போய், அவளுடைய பேர்த்தியை இந்தக் கிழவருக்குச் சேர்த்து வைக்கும்படி சொல்லி அதற்காக ஆயிரம் ரூபாய் கொடுத்தேன். அந்தப் பெண் நன்றாகப் படித்தவள். அவளுக்கு தாசித் தொழில் செய்ய இஷ்டமில்லை. கிரமப்படி யாரையாவது கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்பது அவளுடைய எண்ணம். கிழவி எவ்வளவு சொல்லியும், பெண் அதற்கு இணங்கவே இல்லை. ஆகையால் கிழவி இன்று சாயுங்காலம் அந்தப் பெண் சாப்பிட்ட சாதத்தில் மயக்க மருந்தைக் கலந்து வைத்து, பெண் மயங்கிப் படுத்துக் கொள்ளும்படி செய்து, அவளை இந்த வீணைப்பெட்டிக்குள் போட்டு வைத்துவிட்டு பிறர் சந்தேகப்படாதபடி பக்கத்து வீட்டிற்குப் போய் விடுவதாகவும், சரியாக எட்டு மணிக்கு நாங்கள் வண்டி கொண்டு வந்து, பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட வேண்டுமென்றும் அவள் முடிவு செய்திருந்தாள். அதன்படி நாங்கள் போனோம். கிழவி தான் சொன்னபடியே செய்துவிட்டு எங்கேயோ போயிருந்தாள். நாங்கள் பெட்டியை எடுத்து வண்டியில் வைத்துக்கொண்டு வந்தோம். வரும்போது பெட்டி வழுக்கி வழுக்கிப் பின்னால் போனதாகையால், காப்பிக்கடை ராயரிடம் ஒரு கயிறு வாங்கி பெட்டியை வண்டியோடு சேர்த்துக்கட்டியபின் வேகமாய் ஓட்டிக்கொண்டு வந்தோம். மற்ற சங்கதிகளெல்லாம் உங்களுக்கே தெரியும். இதுதான் உண்மை. துரைகளே! நீங்கள் என்னை அடித்து இம்சித்தால், அதைத் தாங்க எனக்கு சிவனில்லை. உடனே என் உயிர் போய்விடும். அல்லது, எங்களைக் கொண்டுபோய் நியாயஸ்தலத்தில் தண்டனை செய்து வைப்பதிலும் உங்களுக்கு எவ்வித லாபமுமில்லை. நீங்கள் தயவு செய்து எங்களோடு கூடவே அந்த ஜெமீந்தாருடைய பங்களாவிற்கு வந்தால், நான் உங்களுக்கு ஆயிரம் ரூபாய் வாங்கித் தருகிறேன். அது உங்களுக்கு ஏதாவது ஒரு நல்ல செலவுக்கு உபயோகப்படும்.

இந்தப் பெண்ணும் அந்தப் பெரிய மனிதரிடம் இருந்து சுகப்பட்டுப் போய்விடுவாள். நாங்கள் செய்த காரியத்தினுல், யாருக்கும் எவ்வித கெடுதலும் உண்டாகவில்லை. ஆகையால் தர்ம துரையவர்கள் எல்லா விஷயங்களையும் யோசித்து, இதை நான் சொன்னபடி முடிவு செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று நிரம்பவும் பணிவாகக் கூறினுர்.

அதைக் கேட்ட லொள்ளுதுரை நிரம்பவும் கோபங்கொண்டு "அடேய்! கல்தே! நீ இப்பவும் நெஜம் ச்சொல்லல்லெ. தொந்திகிந்தி யெல்லாம் பத்ரம்; தொவெயல் சேஞ்சுடுவோம். இந்தப்பொட்டிக்குள்ற நீ இப்ப அந்த சின்னப்பொம்புள்ளெயெக் காட்டாமெப்போனு,ஒன்னெ என்னுச்செய்யறது? என் காலு பூட்சாலே நூறு அடி அடிக்கலாமா?" என்று அதட்டிக் கேட்க, சாரங்கபாணி முதலியார் தமது இரண்டு கைகளையும் நிரம்பவும் தாபந்திரியமாய் துரைக்கெதிரில் ஏந்திக் கொண்டு "ஆகா! அப்படியே காட்டுகிறேன் துரைகளே! காட்டாவிட்டால், உங்களுடைய பிரியப்படி என்னை எந்த சிட்சைக்கு வேண்டுமாளுலும் உட்படுத்தலாம்; வாருங்கள் காட்டுகிறேன்'' என்று நிரம்பவும் ஆத்திரப்பட்டுக் கூற, அதைக் கேட்ட லொள்ளுதுரை "சரி, வா, காட்டு, இன்னெக்கி நீ சாவப்போறே. ஒன்னுெடெ தலைக்குல்லற சையித்தான் பூந்துக்கினு ஒன்னே ஆட்டுது. வா வண்டிக்கிப் போவலாம்'' என்று கூறிய வண்ணம் வண்டியண்டை போக, சாரங்கபாணி முதலியாரின் இரண்டு பக்கங்களிலும் நின்ற இரண்டு ஜெவான்கள் அவரது இரண்டு பக்கங்களிலும் நெருங்கி வந்து அவருக்குக் கைலாகுகொடுத்து, அவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வண்டியின் பின்புறத்திற்கு வந்து சேர்ந்தனர். அதற்கு முன் கிழவியைத் தூக்கிப் பெட்டிக்குள் விடுத்துவிட்டு அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்த இன்னெரு ஜெவான் தனது கையிலிருந்த லாந்தரைப் பெட்டிக்குள் காட்டவே, அதன் பிரகாசம் பளிச்சென்று பெட்டிக்குள் தாக்கி அதற்குள்ளிருந்த வஸ்துக்களை நன்ருகத் தோற்றுவித்தது. பெட்டியின் மூலையில் பலகைகள் ஒன்றுய்ச் சேர்ந்திருந்த இடத்தில் காணப்பட்ட இடுக்கில் ஓர் ஆயிரம் ரூபாய் நோட்டு மாட்டிக்கொண்டிருந்ததைசார்ஜண்டுதுரை கண்டு உடனே ஆவலோடு பாய்ந்து அதை எடுத்துத் தமது சட்டைப்பைக்குள் சொருகிக்கொண்டவராய் சிறிது தூரத்தில் நின்று சாரங்கபாணி முதலியாரண்டைபோய் "அடேய்! வா ஓய், இப்படி வந்து பாரு.'' என்று அதட்டிக்கூறிய வண்ணம்

முதலியாரின் பின்கழுத்தில் தமது கையைக் கொடுத்து இரும்புப்பிடியாகப் பிடித்து நெறித்தபடி அவரைப் பெட்டிக்கருகில் தள்ளிக் கொண்டு வர, முதலியாரது விழிகள் பிதுங்கிப்போகத் தக்க நிலைமையை அடைந்துவிட்டன. அவரது உயிர் எமனுலகை எட்டிப் பார்த்துத் திரும்பியது. துரை செய்த உபத்திரவத்தைப் பொறுக்காது அவரது உடம்பு துள்ளிக் குதித்தது. அந்த நிலைமையில் பெட்டியண்டை நெருங்கி தமது பார்வையை உட்புறத்தில் செலுத்திய முதலியார் அவ்விடத்தில் கிடந்த கூனற்கிழவியைக் கண்டு திடுக்கிட்டு திக்பிரமைகொண்டு தமது விழிகளை நம்பாமல்அப்படியேஸ்தம்பித்து நின்றுவிட்டார். அது கண்கட்டு வித்தையாக இருக்குமோ, அல்லது, போலீசாரால் செய்யப்பட்ட மோசமாயிருக்குமோ என்ற எண்ணம் மின்னல் தோன்றி மறைவதைப்போல முதலியாரது மனத்தில் தோன்றி மறைந்தது. யௌவனமும், கட்டழகும் வாய்ந்த வசீகர மங்கையான வைதேகியே பெட்டிக்குள் இருக்கிறாள் என்று தாம் அதுவரையில் நினைத்திருந்ததற்கு முற்றிலும் மாறாக, நரைத்து வெண்சாமரம்போல இருந்த தலைமயிரும், பொக்கைவாயும், பூனைக் கண்ணும், கூனல் முதுகும், குறுகிய உடம்பும், சுருங்கிய தோலுமாய் நாய்போலச் சுருட்டி முடக்கி உருண்டையாகக் கிடந்த கிழவியைக் காணவே, சாரங்கபாணி முதலியாரது அடிவயிற்றில் பெரிய நெருப்பு வீழ்ந்ததுபோல ஆய்விட்டது. அவரது மனம் குழம்பிக் கலங்கி பெருத்த திகில்கொண்டு தத்தளிக்கவாரம்பித்தது. அவரது மூளை விர்றென்று சுழலத் தொடங்கியது. அந்த மோசமும் ஆள்மாறுட்டமும்கிழவியினுலேயேசெய்யப்பட்டிருக்குமோ என்று முதலியார் சிந்திக்கலானுர். வேண்டுமென்றே கிழவி தனக்குத்தானே மயக்கமருந்தைக் கொடுத்துக்கொண்டு பெட்டிக்குள் படுத்துக்கொண்டிருப்பாளோ என்று எண்ணுவதற்கு எவ்வித ஏதுவும் இருந்ததாகத் தோன்றவில்லை. அவள் தனக்குத்தானே அவ்விதம் செய்துகொண்டிருந்தால், ஜெமீந்தாரது பங்களாவிற்குப் போனுல், போனவுடனே, தன்னை அங்கிருப்பவர்கள் கண்டு உபத்திரவிததுக் கொன்று விடுவார்களென்பது அவளது மனதில் பட்டிருக்குமாதலால், அவள் அவ்வாறு செய்ததாக எண்ணுவது அசம்பாவிதமாகத் தோன்றியது. ஒருவேளை அவள் வைதேகிக்குப்போட எண்ணிய மயக்க

மருந்து கலந்த சாதத்தைத் தவறுதலாய்த் தானே உண்டு மயங்கிப் போயிருப்பாளோ என்று சந்தேகித்தாலும், அவ்வாறு மயங்கிப்போன வள் வீணைப்பெட்டிக்குள் போய்ப் படுத்துக்கொள்ளவும், அப்போது வைதேகி இல்லாமல் விடு காலியாயிருக்கவும் ஏதுவில்லையென்பது முதலியாருககு நன்ருகப் பட்டது. ஆகவே, கிழவியின் சம்மத மின்றியே அந்த மாறுபாடு நடந்திருக்கவேண்டுமென்றும், தாங்கள் பேசிக்கொண்டிருந்ததை ஒருகால் வைதேகி மறைந்து கேட்டிருந்து ஏதோ தந்திரம்செய்து மயக்கமருந்தைக் கிழவிக்கே போட்டு அவளை தனக்குப் பதிலாகப் பெட்டிக்குள் போட்டுவிட்டுத் தான் அந்த சமயத்தில் எங்கேயாவது வெளியில் போயிருப்பாளோ, அல்லது, மேன்மாடத்திலேயே ஒளிந்துகொண்டிருப்பாளோ என்ற எண்ணம் முதலியாரது மனத்தில் உதித்தது. அவர் மேன்மேலும் ஆழ்ந்து யோசிக்க யோசிக்க, அதே நினைவுதான் உறுதியாகப் பட்டதன்றி, வேறு திருப்திகரமான வகை யெதுவும் புலப்படவில்லை. வைதேகி யினுல் தமக்கு ஏற்பட்ட மோசத்தையும், ஏமாற்றத்தையும் பற்றி அவர் கவலைப்பட்டு அஞ்சியதைக் காட்டிலும், தாம் சார்ஜண்டு துரை யிடம் கூறிய வரலாறு பொய்யாகிவிட்டதைக் குறித்து அந்த துரை தன்னை எவ்வித ஆக்கினைக்கும் சித்திரவதைக்கும் ஆளாக்குவாரோ என்ற கிலியே அபாரமாகப் பெருகி, அவர் சித்தப் பிரமையும் நடுக்க மும் அடைந்து அப்படியே தவித்து நிற்கும்படி செய்துவிட்டது. மகா துஷ்டராகத் தோன்றிய அந்தப் பறங்கிக்கார துரைக்கு தான் எவ்வித சமாதானம் சொல்வதென்பதை அறியாது முதலியார் திருட்டு விழிவிழித்து பைத்தியக்காரனைப்போல இழுத்த இழுப்பிற்கெல்லாம் வரத்தொடங்கினுர். அவரது வாய் அர்த்தமில்லாமல் ஏதேதோ பிதற்ற வாரம்பிக்கிறது. அவ்வாறு நிரம்பவும் பரிதாபகரமான நிலைமையில் நின்ற முதலியாரைப் பார்த்து சிறிதும் இரக்கமாவது அநுதாப மாவதுகொள்ளாமல் ரௌத்திராகாரமான கோபமும் வீராவேசமும் கொண்ட சார்ஜண்டு துரை கீழே குனிந்து தமது வலது காலில் மாட்டப்பட்டிருந்த பூட்ஸை விரைவாகக் கழற்றிக் கையில் எடுத்து அதை ஓங்கி முதலியாரது கன்னத்தில் ஓர் அடி கொடுத்து, தமது பற்களை நறநறவென்று கடித்து நிரம்பவும் விகாரமாகவும் பயங்கர மாகவும் முதலியாரைப் பார்த்து "யூ பிளடி கூல்! டாம் நிக்கர்!

யூ ப்ளடி ஸுவர்! டாம் இடியட்! நாம்ப ஒன்னோட திருட்டுத்தனத்தெக் கண்டுக்கினு இருக்கையிலேயே நம்பகிட்ட நீ பொய்ச்சொல்றே! இந்தப் பொட்டியிலே சின்னப் பொண்ணு இருக்கிறான்னு பொய்யா சொல்றே! சின்னப்பொண்ணைக் காட்டாமெப்போனா, எப்படியாச்சும் தண்டனெ பண்ணலா முன்னுச் சொன்ன கல்தேயல்ல நீ! இதோ தாறேன் பூட்ஸு அடி, வாங்கிக்கோ ராஸ்கல்!'' என்று கூறி மறுபடியும் அதே திருப்பாதரட்சையால் சாரங்கபாணி முதலியாரது திருமேனியில் பலமாக ஒற்றிடம் கொடுக்க, ஒவ்வொரு ஒற்றிடமும் ஒவ்வோர் உழக்கு இரத்தத்தை உறிஞ்சிவிட்டுத் திரும்பியது. முதலியார் "யம்மா! யம்மா! யம்மா! உயிர்போவுதே! ஐயோ! நான் சாகறேனே! துரைகளே! ஆண்டவனே! ஓங்க காலைத்தொட்டுக்கும்பிட்றேன்! நான் பொய் சொல்லலெலே; நெஜமே சொன்னேன். அந்தப் பொண்ணு மோசம் பண்ணிப் புட்டாபோலெ இருக்குது. அவ இந்தக்கிழவிக்கி மயக்க மருந்தைப்போட்டு அனுப்பிச் சுட்டாபோலெ இருக்குது துரையே! கோபம் வாணும். என்னெ அடிச்சதுபோதும். என் சாமீ! இன்னம் ஒரு அடியில்லெ என் உசிரு பூடும் துரையே! போதும் போதும் நிறுத்துங்க! ஓங்க இஷ்டம்போலெ நான் நடந்துக்கறேன்.'' என்று கூறி, துரை மேன்மேலும் தாராளமாய் சுடச்சுட சமர்ப்பித்த தோசைகளைத் தாங்கமாட்டாமல், எண்ணெயில் குதிக்கும் அப்பம்போல தைதாவென்று தத்திக்குதித்துத் தாண்டவம்புரிந்து பல்லிளித்துக் கைகளைப்பிசைந்து தாளம்போட்ட வண்ணம் "ஐயோ! யம்மா! யம்மா!'' வென்று வீரிட்டுக் கதறி ஓலமிட்டலற, அதைக் கேட்ட லொள்ளுதுரை, "ஓ! அப்பிடியா! என்னெ ஏமாத்தப்பாக்கறே! யூ டாம் சீட்! மோசக்காரக் கல்தே! இந்தக்கெயவியைக் கொலைபண்ணி நீ தூக்கிக்கினு போறத்தே மறைக்க, நீ இல்லாத பொல்லாத கதையெல்லாம் ச்சொல்றியா? இருக்கட்டும். ஒரு மினுட்டு நேரத்துலே நெசம் வெளியிலே வரப்போவுது பார். அது இருக்கட்டும். ஓம்பேரு என்ன ஓய்?'' என்றார்.

சாரங்கபாணி முதலியார்:—எஜமானே! என் பெயர் சாரங்கபாணி முதலியார்.

லொள்ளு துரை:—ஒன்னோடெ வூடு எங்கே இருக்குது ஓய்!

முதலியார்:—துரைகளே! எனக்குச் சொந்த வீடே கிடையாது. நான் சோற்றுக்கடையில் சாப்பிட்டுவிட்டு அங்கங்கே எனக்குத் தெரிந்த சிநேகிதர்களுடைய வீடுகளில் படுத்துக்கொள்வேன்.

லொள்ளு துரை:—ஓ! அப்பிடியான நீ நாடோடியைச் சேந்த மனிசன். கேடி ஜாப்தாவிலே ஒன்னோடெபேரு இருக்குதான்னு பாத்தா நெசம் ஓடனே தெரிஞ்சுபூடுது. அதிருக்கட்டும். ஒனக்கு என்ன வேலே?

முதலியார்:—(வெட்கிக் குனிந்து) துரைகளே! எனக்கு இங்கிலீஷ் பாஷை கொஞ்சம் தெரியும். எங்கேயாவது ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்று நான் பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எங்கேயும் உத்தியோகம் கிடைக்கவில்லை. எனக்குத் தெரிந்த சில பெரிய மனிதர்கள் சீக்கிரத்தில் ஏதாவது உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இப்போது அவர்களுடைய சவரக்ஷணையில்தான் நான் இருந்து வருகிறேன்.

லொள்ளுதுரை:—ஓ! அதுவரைபிலே அவுங்க ஒனக்கு டாபர் மாமா உத்தியோகம் கொடுத்திருக்கிறாங்களா! நல்ல உத்தியோகம்! அது போவட்டும்! ஒனக்குப் பொஞ்சாதி சிஞ்சாதி புள்ளெ கிள்ளெ எல்லாம் இருக்குதா?

முதலியார்:—இல்லை துரைகளே! எனக்குப் பிள்ளை குட்டிகள் இல்லை. பெண்சாதி ஒருத்தி இருக்கிறாள்.

லொள்ளுதுரை:—அவ இப்போ எந்த ஊர்லே இருக்கறா?

முதலியார்;—காஞ்சீவரத்திலே அவளுடைய தாயார் வீட்டிலே இருக்கிறாள்.

லொள்ளுதுரை:—ஓம் பொஞ்சாதி டாம் பிளடி காஞ்சபுரத்துலே இருக்கறாளா? ஏன் அவளெ அந்த ஊர்லே வச்சிருக்கறே? இந்த ஊர்லே இருந்தாக்கா இப்ப இந்த டாம் பிளடி ஜெமீந்தாருக்கிட்ட கொண்டு போயி உடலாமல்லவா? இந்தத் தேவிடியாளுக்குக் குடுத்த பணமும் ஒனக்கே வரும். இந்த மாதிரி திருட்டுத்தனமா அவளெப் பொட்டி

யிலே வச்சிக்கினு போவாமே நேருலே கொண்டுபோயி உடலாம். போலீசாரும் புடிச்சிக்கமாட்டாங்க.

முதலியார்:—(மிகுந்த அவமானமும் வெட்கமும் அடைந்து இன்னது செய்வதென்பதை அறியாமல் தடுமாறிப் பல்லிளித்து) இல்லை துரைகளே! என் பெண்ஜாதி இவ்வளவு அழகாய் இல்லை. அவளைக் கண்டு இந்தப் பெரிய மனிதர்கள் பிரியப்படமாட்டார்கள்.

லொள்ளுதுரை:—ஓ! வெல் டன்! வெல் டன்! ஜெமீந்தார் ஆசெப் படமாட்டான்; அதனாலே, அவலெக் கொண்டாறல்லெ. இவன் ஆசைப்பட்டாக் கொண்டாருவே. நீச்சொன்னது நெஜமான பேச்சு. அது போவட்டும். நம்பகிட்ட குதிரைக் காசாரி ஒருத்தன் இருக் கரான். அவனுக்கு ஒரு வைப்பாட்டி ஒணுமாம். அவன் ஆயிரம் ரூபா கொடுப்பான். ஒம் பொஞ்சாதியெ அவன் ஆசெயாவச்சுக்கு வான். நீ போயி அவளெ அளெச்சுக்கினு வாறியா?

முதலியார்:—(முன்னிலும் அதிகமாய் வெட்கிப் பல்லைக் காட்டி நயந்து) என்னை நீங்கள் அவமானப்படுத்தினது போதும் துரைகளே! எனக்கு புத்தி வந்தது. இனிமேல் நான் இந்த வழிக்கே போகிற தில்லை. எப்படியாவது இந்தத் தடவை நீங்கள் என்னைக் காப்பாற்றி விடுங்கள். நீங்கள் என்னோடு கூடவே, அந்த ஜெமீந்தாருடைய பங்களாவுக்கு வாருங்கள். அவரைக் கொண்டு நான் உங்களுக்கு தக்க மரியாதைசெய்து அனுப்பிவைக்கிறேன்—என்று கூறி துரையின் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கெஞ்சத் தொடங்கினார்.

அவரது பரிதாபகரமான செய்கையைக்கண்டுசிறிதும் இரங்காது முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கோபாவேசமும் மூர்க்கத்தனமும் தோற்றுவித்தவராய் "அடே! புத்தி கெட்ட பண்ணீ! என்னச் சொன்னே! நமக்கு நீ மரியாதெச் செய்யப்போறியா? டாம் பிளடி பூல்! என்ன மரியாதை ஓய் அது?" என்றுகூறி சாரங்கபாணி முத லியாரை நோக்கிக் கண்களை பயங்கரமாக விழித்து நறநறவென்று பற்களைக் கடித்துக் கோபப் பார்வையாகப் பார்க்க, அதைக் கண்ட சாரங்கபாணி முதலியார் நடுநடுங்கிப் போனாராயினும், தாம் எப்படி யாவது கெஞ்சிக் கூத்தாடி அந்த அபாயத்திலிருந்து தப்பித்துக்

கொள்ளவேண்டு மென்று கருதியவராய் முன்னிலும் பன் மடங்கு கேவலமாக துரையைப் பணிந்து வணங்கி "துரை கள் விஷயத்தில் நான் யாதொரு தப்பும் செய்யவில்லை. இந்த ஏழையின்பேரில் உங்களுக்கு இவ்வளவு கோபம் ஏனோ தெரிய வில்லையே! நான் ஒரு புழுவிற்குச் சமானம். நீங்கள் மனசு வைத் தால், என்னை ஒரே நசுக்கில் நசுக்கிவிடலாம். என்னை ஜெயிலுக்கு அனுப்புவது உங்களுக்கு ஒரு பெரிய காரியமல்ல. நான் இதுவரை யில் மானமாகப் பிழைத்துவிட்டேன். ஏதோ இல்லாக் கொடுமையி னால், நான் இப்படிப்பட்ட இழிவான தொழிலில் இறங்கினேன். இப்போது நீங்கள் கண்டித்ததிலிருந்து எனக்கு சரியானபடி புத்தி வந்துவிட்டது. இனி என் ஆயிசுகால பரியந்தம் நான் இந்த மார்க் கத்தில் போகவேமாட்டேன். நான் ஜெயிலுக்குப் போனால் எவ்வ ளவு அவமானமும் கஷ்டமும் அநுபவிப்பேனோ அவைகளையெல் லாம் நான் இப்போதே அநுபவித்துவிட்டேன். உங்களுக்கு இஷ்ட மானால் நீங்களே இவ்விடத்தில் என்னை இன்னமும் கேவலமாகத் திட்டுங்கள்; அடியுங்கள்; உங்கள் பூட்ஸ்காலால் உதையுங்கள். உங் கள் வாயிலுள்ள எச்சிலைக் காறி என் முகத்தில் துப்புங்கள். எல்லா வற்றையும் நான் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். அத்தனைக் கும் சன்மானமாக உங்களுக்குச் நான் அந்த ஜெமீந்தாரிடம் இரண் டாயிரம் ரூபாய் வாங்கித் தந்துவிடுகிறேன். அதோடு என்னை விட்டு விடுங்கள். நான் இரவோடிரவாய் இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டு என்னுடைய சொந்த ஊருக்குப் போய்விடுகிறேன். எப்படியாவது நீங்கள் என்னை இந்தத் தடவை மன்னித்துக் காப்பாற்றத்தான் வேண்டும்" என்று கூறி மறுபடியும் துரையின் கால் பூட்ஸ்களை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள, துரை அதிக பலசாலியாதலால், தமது பூட்ஸ்காலை முதலியாரின் தொந்திக்கு அடியில் கொடுத்து ஓர் உந்து உந்த, முதலியார் அலாக்காய்க் கிளம்பி நாலைந்துகஜ தூரத்திற் கப்பால் போய் பொதேரென்று விழுந்து வாய்நிறைய மண்ணைக் கௌவினர். அவரது பொறி கலங்கிப்போயிற்று. உடம்பு கட்டு விட்டுக் கலகலத்துப்போயிற்று. மகா பொல்லாதவனாகத் தோன்றிய அந்த சட்டைக்கார துரை தம்மை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் இரவு முழுதும் அடி அடியென்று அடித்து நகக்கண்களில் ஊசியைச்

சொருகி உயிரோடு கொன்றுவிடுவான் என்ற பெருந் திகிலும் குலை நடுக்கமும் கொண்ட துபாஷ் முதலியார் அதற்குமேல் தாம் என்ன செய்கிறதென்பதையும், அந்த துரையின் மனம் இரங்கும்படி தாம் எப்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வதென்பதையும் அறியாமல் பைத் தியக்காரனைப் பேந்தப் பேந்த விழித்துத் தத்தளித்து நெருப் பின்மேல் நிற்பவர்போல நரகவேதனை யநுபவித்திருக்க, அதே சமயத்தில் சார்ஜண்டுதுரை அவ்விடத்தில் நின்ற ஜெவான்களைப் பார்த்து "அடேய்! எல்நூத்தி முப்பீத் துன்னூ! இந்த மனிசன் கைக்கி தங்கத்தோடா மாட்டு" என்று அதட்டிக் கூறினர். உடனே ஒருஜெவான் தனது சட்டைப்பையிலிருந்தகெட்டியான ஒரு விலங்கை வெளியில் எடுத்தான். விளக்கு வெளிச்சத்தில் பளபளவென மின் னிய அந்த விலங்கைக் கண்ட முதலியாரது பிராணன் அநேகமாய்ப் போய்விட்டதென்றே சொல்லவேண்டும். முதலியாரது மனநிலைமை ஒரே குழப்ப மயமாக இருந்ததன்றி, தமது தேகம் அப்போது ஆகாயத்தில் பறந்துகொண்டு போவதுபோல உணர்ந்தவராய், அவர் முற்றிலும் செயலற்றுச்சோர்ந்து நின்றூர். அவரது தேகம் அப்படியே ஒடிந்து இரண்டு துண்டாய் விழுந்துவிடுமோவென்று அஞ்சத்தக்க நிலைமையை யடைந்து வளைந்து வளைந்து அசைந்தாடியது. எமகிங்க ரர்களைப்போல அவரைச் சூழ்ந்து நின்ற மூன்று ஜெவான்கள் ஒரே பாய்ச்சலாக அவர்மீது பாய்ந்து அவரைப் பிடித்துக்கொண்டனர். அவர்களுள் ஒருவன் தனது கையில் வைத்திருந்த விலங்கைப் பிரித்து, முதலியாரது இரண்டு கைகளையும் ஒன்றுகச் சேர்த்து விலங்கினுல் இறுகப் பிணித்துவிட்டான். விலங்கும் கையுமாய் நின்ற முதலியாரது மனநிலைமையும் தேகநிலைமையும் விவரிப்பதற்கு சிறிதும் சாத்தியமற்றதாக இருந்தன. அவர் தம்மைத் தாமே குனிந்து பார்த்துக்கொள்வதற்கும் வெட்கித் தமது கண்களை மூடியவண்ணம் அப்படியே நிலைகலங்கி மயங்கி நின்றூர். அந்த இடம் போலீசார் உள்பட இருந்த ஏழு மனிதரைத் தவிர, வேறு மனிதரே இல்லாமல் நிர்மானுஷ்யமாகத் தோன்றியதானுலும் சாரங்கபாணி முதலியார் முற்றிலும் குன்றிப்போய் உலகத்திலுள்ள சகலமான ஜனங்களும் தமது நிலைமையைப் பார்த்துக் கைகொட்டி ஏளனம் செய்வதுபோல வும், பக்கத்தில் காணப்பட்ட மரங்கள்கூட உயிர்பெற்றுத் தம்மைக் கண்டு வாய்விட்டு நகைத்துக் காறி எச்சிலைத் தம்மீது உமிழ்வது போலவும் உணர்ந்து மிகமிக பரிதாபகரமான நிலைமையில் நின்று தத்தளித்தார்.

உடனே லொள்ளுதுரை முதலியாருக்கு எதிரில் வந்து நின்று "அடேய்! டாபர் மாமா! எனக்கு மரியாதைச் செய்யற மனிச னல்லவா நீ! ஓனக்கு நாங்க மரியாதை செய்யாமே இருக்கலாமா? வெரிவெல்! ஏறு வண்டியிலே. அந்த பிளடி பூல் ஜெமீந்தார் ஊட்டுக்குப்

போவலாம் வா'' என்று கூற, உடனே ஜெவான்கள் சாரங்கபாணி முதலியாரைக் குதிரைவண்டியில் உட்கார வைத்தனர். உடனே லொள்ளுதுரை முதலியாரைப் பார்த்து "அடேய்! அந்த ஜெமீந் தாருடைய சொந்த ஊரு எது? அது ஒனக்குத் தெரியுமா?" என்று அதட்டிக் கேட்க, முதலியார் "தெரியும் எஜமானே! மதுரை ஜில்லா வில் லோகாற்புதம் என்று ஒரு சமஸ்தானம் இருக்கிறதாம். அந்த சமஸ்தானத்திற்கு இவர் சொந்தக்காரராம்.'' என்றார்.

உடனே துரை "சரி; வெல். நல்லது. நாம்ப அவுரோடே வூட்டுக்குப் போவலாம். அந்த வண்டிக்காரனை இங்கே இஸ்த்துக்கினு வாங்க'' என்று மற்ற ஜெவான்களையும் நோக்கிக்கூற, இவர்கள் சம்பா ஷித்தது கேளாத தூரத்தில் வண்டிக்காரனை நிற்க வைத்துக்கொண் டிருந்த மற்ற இரண்டு ஜெவான்களும் அவனைப் பிடித்து அழைத்துக் கொண்டுவந்து சேர்ந்தனர். அவன் முன்போல வண்டியின் முன் பக்கத்தில் உட்கார்ந்து ஜெமீந்தாரது வீட்டிற்கு ஓட்டவேண்டுமென்று துரை ஆக்ஞாபிக்க, அவன் அப்படியே ஏறி உட்கார்ந்து வண்டியை ஓட்டத்தொடங்கினான். போலீசார் ஐவரும் தத்தம் பைசைகில் வண்டி களில் ஏறிக்கொண்டு, குதிரை வண்டியின் நாற்புறங்களிலும் சூழ்ந்து வரத்தொடங்கினர். அவ்வாறு குதிரைவண்டி மேலும் அரை நாழிகை காலம் தெற்கில் சென்று தேனாம்பேட்டையை அடைந்தது. அந்த லோகாற்புதம் ஜெமீந்தாரின் பங்களாவிற்குச் சிறிது தூரத்திற்கு இப்பால் போனபோதே வண்டியை நிறுத்தும்படி லொள்ளுதுரை உத்தரவு செய்திருந்தாராதலால், அதன்படி அந்த பங்களாவிற்கு சுமார் ஐம்பது கஜத்திற்கு இப்பாலேயே வண்டி நிறுத்தப்பட்டது.

உடனே சாரங்கபாணி முதலியார் வண்டியை விட்டுக் கீழே இறக்கப்பட்டார். சார்ஜண்டு துரை தமது ஜெவான் ஒருவனைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய், அவனது போலீஸ் உடுப்புகளை யெல்லாம் கழற்றச்செய்து தனியாக அவனிடம் அடியில் வருமாறு கூறினார். "அடேய்! நீ ஒரு காரியம் செய். நாங்கள் நால்வரும் இந்த முதலியாரை நிறுத்திக்கொண்டு இவ்விடத்திலேயே இருக்கி றோம். நீ இந்த வண்டிக்காரனோடு உள்ளே போய், அவனையும் சேர்த்துக்கொண்டு இந்தப் பெட்டியைத் தூக்கிக்கொண்டுபோய், ஜெமீந்தாருடைய படுக்கை யறைக்குள் வைத்துவிட்டு வந்துசேர். சாரங்கபாணி முதலியார் எங்கே என்றும், நீ யார் என்றும் ஜெமீந் தார் கேட்பார். நீ முதலியாருக்கு வேண்டிய மனிதனென்றும், அவர் தேகபாதை நிவர்த்தியின் பொருட்டு கொஞ்சம் அப்பால் போயிருப்ப தாகவும், கொஞ்ச நேரத்தில் வருவாரென்றும், அவரால் இந்தப் பெட்டியைத் தூக்கமுடியவில்லையென்றும், அவர் உன்னை உதவிக்கு அழைத்து வந்ததாகவும் நீ சொல். இந்தப் பெட்டிக்குள் கிழவி இருக்கிறாளென்பது இந்த வண்டிக்காரனுக்குத் தெரியாது. தேவடி

யாள் பெண் இருக்கிறுளென்றே இவன் நினைத்துக்கொண்டிருக்கிறுன். ஆகையால் பெட்டிக்குள் தேவடியாள் பெண்ணை வைத்துக்கொண்டு வந்திருப்பதாக நீ ஜெமீந்தாரிடம் கூசாமல் சொல். பெட்டி படுக்கை யறைக்குள் போனவுடனே, நீ அங்கே தாமதிக்காமல் உடனே எங்களிடம் வா. உடனே நாம் போய், இந்த ஜாகையை சோதனை போடுவதுபோல நடித்து, கிழவியை இந்த ஜெமீந்தார் கொல்ல யத்தனித்ததாகப் பிடித்துக்கொள்வோம்.'' என்றுர்.

அதைக் கேட்ட ஜெவான் அப்படியே நடந்துகொள்வதாகச் சொல்லிவிட்டு கழற்றப்பட்ட தனது உடைகளையெல்லாம் மூட்டையாகக் கட்டிக்கொண்டுவந்து மற்ற ஜெவான்களிடம் கொடுத்துவிட்டு வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

உடனே துரை வண்டிக்காரனைப் பார்த்து "அடேய் வண்டிக்காரா! இந்த முதலியாரை வேறே ஒரு குற்றத்துக்காக நாங்க அரெஸ்டு பண்ணிக்கொண்டு போறேம். இந்த சங்கதியெ நீ ஒங்க எசமானுக்குச் சொல்லாதே. சொன்னியா ஒன்னே ஒடனே புடிச்சு லாக்கப்பிலே போட்டுடுவோம். இந்தப் பெண்ணைக் கொண்டாந்ததுலே, ஜெமீந்தாருமேலெ மிஸ்டேக் இல்லே. அவுருபொண்ணுக்காவக் காத்திருப்பாரு. ஒனக்கு ஒத்தாசெக்காவ, நான் ஒரு ஜெவானெ அனுப்பறேன். அவுனும் நீயும் இந்தப் பெட்டியேத் தூக்கி ஜெமீந்தாரோடெ படுக்கை உள்ளுலே கொண்டு போயி வச்சுப்புட்டு வந்துடுங்க. தெரியிதா? ஜெமீந்தாரு எது கேட்டாலும் எங்க ஜெவான் ஜவாப்பு சொல்லுவான். நீ வாயெத்தொறக்காதே. தெரியிதா? ஜாக்கிரதை. மிஸ்டேக் பண்ணிஞ செத்தே." என்றுர்.

சார்ஜண்டு துரை சாரங்கபாணி முதலியாரை அடித்து வதைத்து விலங்கிடச்செய்ததை யெல்லாம் தூரத்தில் நின்றபடி அவன் பார்த்து கதிகலங்கி நின்று, தனக்கும் அத்தகைய உபத்திரவம் இல்லாமல் போக வேண்டுமே என்று தெய்வங்களை யெல்லாம் வேண்டிக்கொண் டிருந்தவனுதலால், சார்ஜண்டு துரை தன்னை அவ்வளவோடு விட்டுவிட்டதை எண்ணி அளவற்ற மகிழ்ச்சியும் ஊக்கமும் அடைந்து, அவரது உத்தரவின்படியே நடந்துகொள்வதாக உறுதி கூறினுன். உத்தியோக உடுப்புகளற்ற ஜெவானும் வேலைக்காரனும் கூனற்கிழவியிருந்த வீணைப்பெட்டியும் இருந்த குதிரை வண்டி மாத்திரம் அடுத்த நிமிஷம் பங்களாவிற்குள் நுழைந்து மறைந்து போயிற்று.

182822

குறைந்த விலை! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு!!

English Self Instructor. Rs. 1-8-0.

இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

இங்கிலீஷ் கற்கும் வழி.

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற
வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்றாக விளங்கும்படி வெளியிடப்பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,
3, இருசப்பன் சந்து, மிண்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

புதிய மாதிரி! நூதனமானது!!

உயர்ந்த வால் நட் கேஸ்.

ஆபீஸ் கிளாக் ரூபா 5.



இந்த ஆபீஸ் கிளாக் பெயர் பெற்ற கெடியார கம்பெனியாரால் செய்யப்பட்டு எங்களால் வரவழைக்கப்பட்டது. பார்வைக்கு மிக்க அழகாயும், சுவரில் மாட்டுவதற்கு மிக்க ரம்மியமாக இருக்கிறது. எல்லா விடங்களிலும், கவர்ன்மெண்டு, லோகல் பண்டு, முனிசிபல், மற்ற வியாபார ஆபீஸ்களில், இக்கெடியாரம் (ஜெர்மன் தேசத்தின் ஆபீஸ் கிளாக்கை) சந்தோஷத்துடன் உபயோகித்து வருகிறார்கள்.

முந்துங்கள்!!

5 வருஷம் உத்தரவாதம். விலை **1**. க்கு ரூபாய். **5.**

வி. எஸ். வாச் கம்பெனி,

தபால் பெட்டி 105, மதராஸ்.

அமிர்தாஞ்சனம்

அமிர்தா

ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

அமிர்தாஞ்சனம்

1926 காலண்டர்கள் 1926.

சிறந்த ஓவியர்களால் வரையப்பெற்றதும் மூன்று வர்ணங்கள் கொண்டதுமான ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினியின் அழகிய சித்திரப்படங்களிலொன்றுடன் விளங்குவன.

ஒன்று, 0-2-0 டஜன் 1-4-0 நூறு, 9-12-0

தினசரி கிழிக்கும் ஆபீஸ் காலண்டர் ஒன்றுக்கு 0--4-0

(பாக்கிங்கும் தபாற்கூலியும் பிரத்யேகம்.)

படை மருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல் பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்,

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச் செட்டி வீதி, சென்னை.

சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பட்டது.